விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 24 திங்கட்கிழமை (10.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jeffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# தேசியத்துக்கும் சர்வதேசத்துக்குமான போராட்டமே தற்போது நடக்கிறது!

## என்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டில் இன்று இடம்பெறும் அரசியல் போராட்டமானது எனக்கும் ரணிலுக்குமான போராட்டம் அல்ல; மாறாக அது தேசியவாதத்துக்கும் சர்வதேசவாதத்துக்கும் இடையேயான போராட்டம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## நான் இப்போது வேலையற்ற பிரதமர் மகிந்த கவலை



23☛

## முல்லைத்தீவில் 30 அடி திமிங்கிலம் கரை ஒதுங்கியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுமாத்தளன் கடற்கரைப்பகுதியில் உயிரிழந்த நிலையில் திமிங்கிலம் ஒன்று நேற்று கரை ஒதுங்கியுள்ளது.

சுமார் 30 அடி நீளம் கொண்ட குறித்த திமிங்கிலம் இறந்த நிலையில் கரை ஒதுங்கியுள் 23☛

## இரணைமடுவில் மயிரிழையில் தப்பிய சிறுமி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் வான்பாயும் பகுதிக்குள் சென்று பார்வையிட்டுக்கொண்டிருந்த சிறுமி தவறி நீருக்குள் வீழ்ந்த நிலையில் காப்பாற்றப்பட்டு 24☛

## இரணைமடுவில் நீராடியவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுவின் வான்பகுதிக்குள் குளித்துக்கொண்டிருந்த போது நீரில் இழுத்துச் செல்லப்பட்டு மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மீசாலையைச் 24☛

## ஜனநாயகத்தை பாதுகாக்க யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், தேசிய அரசாங்கத்தை அமைப்போம் என்ற கோரிக்கையின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. 23☛



## ரணிலின் பலம் இதுவே என்றார் கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

மக்களால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே இன்று தன்னால் சுதந்திரமாக செயற்பட முடியாத அளவிற்கு சர்வதேச அழுத்தம் எழுந்துள்ளது. தூதரகங் 23☛

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிப்பதால் ஜே.வி.பியின் ஆதரவு அவசியமில்லை

## ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு அவசியமில்லை எனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிப்பதால் அதற்கான பெரும்பான்மை எம்மிடம் உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், ரணில்விக்கிரமசிங்கவின் பெரும்பான்மை பலத்தினை நிரூபிக்க 113 உறுப்பினர்களது ஆதரவே தேவையாகும். இப்பெரும்பான்மைக்கு மக்கள் விடுதலை முன்னணியினரது ஆதரவு அவசியமில்லை அது அவர்களது தனிப்பட்ட கட்சிசார் தீர் 23☛

## மைத்திரியுடன் மகிந்த அணி இன்று விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் விசேட சந்திப்பொன்றை இன்று ஏற்படுத்தவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர்கள் சிலருக்கும் இடையே நேற்றைய தினம் கலந்துரையாடல் ஒன்று 23☛

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவு செயலகம் முன் கவனயீர்ப்பு

(முல்லைத்தீவு)

காணாமல் ஆக்கப்பட்டவர் களது உறவுகளால் இன்று முல்லை மாவட்ட செயலகம் முன்பாக பாரிய கவனயீர்ப்புக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் தமது பிள்ளைகளை தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் இன்று 372 ஆவது நாளாகவும் முல்லைத்தீவில் தொடர்கிறது.

இந்நிலையில் இன்று திங்கட்கிழமை தமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டி மாபெரும் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவு 23☛

## விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னும் அச்சுறுத்தலே!

ரொகான் குணரத்ன எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கைக்கு இன்னும் அச்சுறுத்தலான இயக்கமாக இருப்பதாக, சர்வதேச தீவிரவாதம் குறித்த நிபுணர் ரொகான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் முன்னாள் . 23☛

## தமிழ் மக்கள் மகிந்தவை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்

கூறுகிறார் சித்தார்த்தன்

(கொழும்பு)

தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ஷவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதன் காரணமாகவே நாங்கள் 23☛



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## RAVEENS EMC- KARAVEDDY

வடமராட்சியில் முதன் முறையாக...

G.C.E A/L (ENGLISH MEDIUM) – 2019
MATHS & BIO

பெற்றோர்களே!

- வடமராட்சியில் G.C.E A/L (English Medium) வகுப்புகளை நடாத்துவதற்கான அனுமதி நெல்லியடி மத்திய கல்லூரிக்கும், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும் முன்னரே வழங்கப்பட்டுவிட்டது.
- G.C.E A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற பாடசாலை கல்வியுடன் மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பும் மிக அவசியமாகின்றது.
- வடமராட்சியில் ஆங்கிலமொழி மூல கற்றலுக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் பங்களிப்பு செய்யாததால் 6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரை 6 வருடங்களாக ஆங்கிலமொழி மூலம் கற்ற பிள்ளைகள் தமிழ் மொழி மூலம் G.C.E A/L இல் கல்வி கற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.
- இதனால் இம் மாணவர்கள் சொல்லமுடியாத கஸ்டங்கள், மன உளைச்சல் போன்ற துன்பங்களை அனுபவித்த போதும் பல்கலைக்கழகக் அனுமதியில் பாரிய பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளனர்.
- இவ்வித அவல நிலையில் ஆங்கிலமொழி மூலம் கற்க மாணவர்களின் நன்மை கருதி மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையும், நெல்லியடி மத்திய கல்லூரியும் 2019 இல் இருந்து G.C.E A/L ஆங்கில மொழி மூல வகுப்புக்களை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.
- எமது கல்வி நிறுவனமாகிய Raveens EMC 2019 இல் இருந்து 6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரை ஆங்கில மொழி மூலம் படித்த மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில மொழி மூல G.C.E A/L வகுப்புக்களை தொடங்கவுள்ளோம்.
- தேசிய ரீதியில் எமது நிறுவன மாணவர்கள் பெற்ற சாதனைகள் போன்று இனி தொடங்கவிருக்கும் G.C.E A/L விஞ்ஞான மாணவர்களை நவீன தொழிநுட்ப அறிவுப் பயன்பாட்டின்படி நெருக்கடி இல்லாத கற்பித்தல் முறைகளால் அதி உயர் பெறுபேறுகளை பெற வழி வகுப்போம்.
- எமது நிறுவனத்தில் கல்வி கற்றிராத ஆனால் ஆங்கில மொழிமூலம் முழப்பாடங்களையோ அன்றி கணித விஞ்ஞான பாடங்களையோ கற்ற மாணவர்களுக்கு அனுமதி வழங்க தீர்மானித்துள்ளோம்.
- இவ்விதம் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் 17.12.2018 (திங்கட்கிழமைக்கு) முன்னர் எமது நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு : 2019 இல் 6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரையான உடனடி அனுமதி தொடர்பாக...
தரம்: 6 – 2 வெற்றிடங்கள் | தரம்: 8 – 1 வெற்றிடம் | தரம்: 9 – 1 வெற்றிடம் | தரம்: 10 – 3 வெற்றிடங்கள்

(C-4656)

P.Easwaranathan (B.Sc (Hons) (Agric) Dip in Edu
Director
☎ 021 226 3321


# கொக்குத்தொடுவாயில் வெடிபொருள் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மத்தியில் அபாயாகரமான வெடிபொருள் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கனரக வாகனத்தை தகர்த்தழிக்கும் வெடிகுண்டு ஒன்று தனியார் காணி ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணி உரிமையாளர் பழமரக் கன்று ஒன்றை நடுவதற்காக வீட்டின் பின் புறப்பக்கம் குழிதோண்டியுள்ளார்.

இதன்போது மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் வெடிகுண்டு ஒன்று இருந்ததை கண்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து கொக்குத்தொடுவாய் கிராமசேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு காணி உரிமையாளர் தகவல் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் நீதிமன்றத்தின் அனுமதியுடன்நேற்று நண்பகல் குறித்த பகுதிக்கு பொலிஸாருடன் சென்ற அதிரடிப்படையினர் அபாயகரமான வெடிகுண்டை மீட்டுள்ளனர்.

1984-ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொக்குத்தொடுவாய் பிரதேசம் கொண்டுவரப்பட்டபோது அந்தப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-28)

# மரண அறிவித்தல்

தோற்றம் 1927 . 02 . 08



மறைவு 2018 . 12 . 09

## வேலுப்பிள்ளை கார்த்திகேசு

(வவு/சேமமடு மகா வித்தியாலய ஓய்வுபெற்ற உப அதிபர்)

பருத்தித்துறை தும்பளையை பிறப்பிடமாகவும், வவுனியா வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும், குடத்தனை கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கார்த்திகேசு அவர்கள் நேற்று (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் குடத்தனை கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடத்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடத்தனை கிழக்கு,
குடத்தனை.

தகவல்: குடும்பத்தினர்
077 175 7515

(சி-4657)


# மகான்களின் வழியில் மெய்ப்பொருள் காண்

திருவண்ணாமலை மூக்குப்பொடிச் சித்தர் 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை சமாதி அடைந்த மகானை நினைந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.




எங்கள் காலத்தில் வாழ்ந்த சித்தரை நினைந்து பெருமை அடைகிறோம்.

தகவல்களுக்கு:
077 390 1877, 077 378 3316

(சி-4654)


சைவ பிரகாச பேரவை,
யாழ்ப்பாணம்.

# புலி ஆதரவாளர்களின் தேவைக்கு இணங்கவே புதிய அரசியலமைப்பு!

## கோத்தபாய கொந்தளிப்பு

(கொழும்பு)

புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் தேவைக்கு இணங்க, புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வருவதற்காகவே, ரணில் தரப்பினர் மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கின்றனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.



மொரட்டுவயில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "முப்பது வருடங்களாக நாட்டில் பாரிய யுத்தம் இடம்பெற்றது. இதனால், நாடு பாரிய சவால்களுக்கு உள்ளாகியது.

ஆனால், அன்று நாட்டில் ஸ்திரமான அரசாங்கங்கள் இருந்தன. இதனாலேயே அபிவிருத்தியோடு, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் முடியுமாக இருந்தது.

எனினும், இன்று ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கொண்டுவந்த 19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நாடு எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இதனால், நாட்டில் இன்று பிரதமரோ அமைச்சரவையோ இல்லாமல் போயுள்ளது. நாடு நன்றாக இயங்கிக் கொண்டிருந்த வேளையில், பொய் பிரசாரங்களை மேற்கொண்டு இனவாதத்தை பரப்பி, மகிந்தவை தோற்கடிக்கச் செய்த சூழ்ச்சியிலேயே இந்த நாடு இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவரவே முயற்சிகளை மேற் கொண்டது. இதில், நாடாளுமன்றால் தெரிவு செய்யப் படும் ஜனாதிபதியொருவரே முன்மொழியப்பட்டிருந்தார்.

நாடாளுமன்றுக்கு அடுத்த படியாக இரண்டாவது சபை யொன்றும் கொண்டு வரப்பட விருந்தது. இந்த இரண்டு சபையினாலேயே ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

அடுத்ததாக, நாடாளுமன்றின் அதிகாரமும் வரையறுக்கப்பட்டிருந்தது. இவற்றுடன் வடக்கு- கிழக்கை இணைத்து ஒரு முதல்வரின் கீழ் நிர்வகிக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தேசிய பாதுகாப்பு என்பது ஒரு நாட்டுக்கு முக்கியமான ஒன்றாகும். 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை இந்த நாட்டில், எந்தவொரு பிரச்சினையும் இருக்கவில்லை.

ரணில் அரசாங்கம் வந்த பிறகு, இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கடுமையாக பாதிக்கப்பட்டனர். பொய்க் குற்றச்சாட்டுக்களால் அவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

இவ்வாறான சம்பவங்களின் விளைவாகவே, வவுணதீவு சம்பவம் இடம் பெற்றுள்ளது. இது சாதாரண ஒரு விடயமல்ல. இந்த நிலையில், மீண்டும் ரணில் தரப்பினர் ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார்கள்.

சர்வதேச சக்திகள், பிரிவினைவாதிகள், புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் தேவைக்கு இணங்க, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். இது பாரதூரமான ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தனியொருவரின் நிர்வாகம் நாட்டிற்கு அவசியமில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(பொலநறுவை)

தனியொருவரின் நிர்வாகம் நாட்டிற்கு அவசியமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில்நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இன்று அனைவரும் நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்பார்த்திருக்கின்றனர்.

பிரதமர் மற்றும் அமைச்சுகள் உள்ளபோதிலும் அமைச்சுகள் செயற்பட முடியாதுள்ளன. நாட்டின் நிர்வாகப் பொறுப்பு தனி ஒருவராக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இது தொடர்பில் நான் ஒருபோதும் மகிழ்ச்சியடையவில்லை. ஜனநாயகத்தை சக்திமிக்கதாக மாற்றும் நாட்டில், தனியொருவரின் நிர்வாகம் நாட்டிற்கு அவசியமில்லை.

பிரதமர் மற்றும் அமைச்சர்களின் நிர்வாகம் இன்றி நான் மிகவும் பொறுப்புடன், பொறுமையாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன்.

நீதிமன்றம் இந்த நிலைமையை புரிந்துகொண்டு, ஜனநாயகத்தை சக்திமிக்கதாக மாற்றுவதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கும் ஏதுவான தீர்ப்பொன்றை வழங்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்பையும் நான் ஏற்றுக் கொள்வேன். தீர்ப்பிற்கு அமைய எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பேன். அமைச்சுகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டாலும், முப்படையினர் தமது சேவையை சிறப்பாக முன்னெடுக்கின்றனர்" என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை

# சர்வாதிகாரத்தைத் தடுக்கும் ஆயுதமாக நீதிமன்றம்

## குமார வெல்கம மகிழ்ச்சி

(கொழும்பு)

ஜனாதிபதி முறையாக அரசியலமைப்பினையும், பாராளுமன்ற விதிமுறைகளையும் பின்பற்றியிருந்தால் அரசியல் நெருக்கடிகள் ஏதும் ஏற்பட்டிருக்காது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, ஜனாதிபதியின் கருத்துக்கள் மீது நாட்டு மக்கள் எவருக்கும் தற்போது நம்பிக்கையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பினையே அனைவரும் இறுதியாக நம்பியுள்ளனர். நீதித்துறையை சுயாதீனப்படுத்தியுள்ளமையானது மகிழ்ச்சிக்குரியது.

இன்று சர்வாதிகாரத்தினை தடுக்கும் ஆயுதமாக நீதிமன்றம் செயற்படுகின்றது. அரசியல் நெருக்கடிகள் அனைத்திற்கும் தீர்வு பெறும் விதமாக தீர்ப்பு அமைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)



# ஐ.தே.கவுக்கும் ரணிலுக்கும் இடையில் இரகசிய தொடர்பாளராக சுமந்திரன்

## சுசில் பிரேமஜெயந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இரகசிய தொடர்பாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் செயற்படுகின்றார் என்று முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

" கடந்த 7 ஆம் திகதி அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி மேற்கொண்டது. ஆனால் அதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எதிர்த்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அந்த ஆவணங்களை மொழி பெயர்த்து 7 ஆம் திகதி காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

இதேவேளை, மேற்கத்திய நாடுகளை திருப்திப்படுத்தவே ஐக்கிய தேசியக் கட்சி இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் சுசில் பிரேமஜெயந்த குற்றம் சாட்டியுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் நடைபெற்ற போது நீதிமன்ற வழக்கை முன்னெடுத்தும் சுமந்திரனே. கடிதம் வாயிலாக ரணில் அரசுக்கு ஆதரவு தெரிவித்ததும் சுமந்திரனின் முயற்சியே என்று சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

இதன் மூலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் இரகசிய தொடர்பாளராக சுமந்திரன் செயற்படுகின்றார் என்றும் அவர் குற்றம் சாட்டினார். (இ-7)

# பயங்கரவாத விசாரணைப் பிரிவு பணிப்பாளராக ஜயசுந்தர நியமனம்

(கொழும்பு)

கடந்த காலத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய பயங்கரவாத விசாரணைப் பிரிவின் புதிய பணிப்பாளராக, யாழ்ப்பாண பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஈ. ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜயசுந்தர, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் பொறுப்பதிகாரி" பதவிக்கு மேலதிகமாக அமைச்சரவை இணைப்பு பிரிவின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை அடுத்து வெற்றிடம் ஏற்பட்ட யாழ்ப்பாண பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு யு.பீ.ஏ.டி.கே.பீ. கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கருணாரத்ன தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் பிரதான நிர்வாக அதிகாரியாகவும் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேருந்து- மோ.சைக்கிள் விபத்து பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

(பதுளை)

பதுளை - கோட்டேகொட வைத்தியசாலைக்கு அருகில் பேருந்தொன்று மோட்டார் சைக்கிளில் மோதி இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பதுளை நகரில் மோட்டார் வாகனமொன்று சமிக்ஞை தூணில் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (இ-7)

# இனிமை இதோ... இதோ...

## சாதனை வெற்றிக்கு இந்தியா முனைப்பு
## விக்கெட்டுக்களை இழந்து வேதனையில் ஆஸி., தவிப்பு



அஸ்வினை ஆட்டமிழக்கச் செய்து 100ஆவது விக்கெட்டை கைப்பற்றிய தருணத்தில் ஸ்ரார்க்


கவாஜாவின் ஆட்டமிழப்பை கொண்டாடும் இந்திய அணித் தலைவர் ஹோலி

அடிலெய்டு டெஸ்டின் இன்றைய நாள் இந்தியாவுக்கு இனிமையானதாக அமைய வாய்ப்பு உள்ளது. பந்துவீச்சில் அஷ்வின், மொஹமட் ஷமி அசத்த அவுஸ்திரேலிய அணி முன்னணி விக்கெட்டுக்களை இழந்து போராடுகிறது. அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி அடிலெய்டில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இந்தியா 250, அவுஸ்திரேலியா 235 ஓட்டங்கள் எடுத்தன.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**புஜாரா, ரகானே அரைச்சதம்**

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இந்தியாவின் புஜாரா, ரகானே ஜோடி சிறப்பாக விளையாடியது. புஜாரா டெஸ்ட் அரங்கில் 20ஆவது அரைச்சதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்கு 87 ஓட்டங்கள் சேர்த்தபோது, புஜாரா (71) ஆட்டமிழந்தார். ரகானே அரைச்சதம் கடந்து நம்பிக்கை அளித்தார். ரோகித் ஒரு ஓட்டத்தில் திரும்பினார். லயனின் 96வது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார் ரிஷாப். இவரது அடுத்த ஓவரிலேயே ரிஷாப் (28) ஆட்டமிழந்தார். ஸ்டார்க் 'வேகத்தில்' அஷ்வின் (5) வெளியேறினார்.

**லயன் ஜாலம்**

இதன் பின், லயன் 'சுழல்' வலை விரித்தார். இவரது 104ஆவது ஓவரின் முதல் பந்தில் ரகானே (70) சிக்கினார். அடுத்த பந்தில் ஷமி 'டக்' அவுட்டானார். இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் 307 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் அஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக லயன் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**கடின இலக்கு**

பின் 323 ஓட்டங்கள் என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது. ஆரோன் பின்ச், மார்கஸ் ஹரிஸ் ஜோடி மந்தமாக விளையாடியது. முதல் 6 ஓவர்களில் 3 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அஷ்வின் 'சுழலில்' பின்ச் (11) சிக்கினார். மார்கஸ் ஹரிஸை (26), ஷமி வெளியேற்றினார். கவாஜா (8) மீண்டும் அஷ்வினிடம் சிக்கினார். ஹேண்ட்ஸ்கோம்ப் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

**ஷோன் மார்ஷ் நிதான ஆட்டம்**

ஷோன் மார்ஷ் - டிராவிஸ் ஹெட் ஜோடி இணைந்தது விக்கெட் சரிவை தடுத்து நிறுத்தினர். முரளி விஜய் பந்துவீசியும் பலன் கிடைக்கவில்லை. ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஷோன் மார்ஷ் (31), டிராவிஸ் ஹெட் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அதிகபட்சமாக அஷ்வின், ஷமி தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இன்றைய கடைசி நாள் ஆட்டத்தில் இந்திய பந்துவீச்சாளர்கள் மீதமுள்ள 6 விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்தினால் வெற்றியை வசப்படுத்தலாம். அவுஸ்திரேலியாவுக்கு இன்னும் 219 ஓட்டங்கள் தேவை என்பதால் தப்புவது கடினம்.

**100**

அஷ்வினை அவுட்டாக்கிய அவுஸ்திரேலியாவின் ஸ்டார்க் சொந்த மண்ணில் 100 ஆவது டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்த இலக்கை எட்டிய 18ஆவது ஆஸி வீரர் என்ற பெருமை பெற்றார்.

**லயன் '13'**

2ஆவது இன்னிங்சில் ரகானேயை வெளியேற்றிய அவுஸ்திரேலியாவின் லயன் 5ஆவது விக்கெட்டை சாய்த்தார். இதன்மூலம், டெஸ்ட் அரங்கில் ஒரே இன்னிங்சில் 13ஆவது முறையாக 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**ரிஷாப் '2'**

இப்போட்டியின் முதல் இன்னிங்சில் இந்திய விக்கெட் காப்பாளர் ரிஷாப் பன்ட் 6 'பிடி' எடுத்தார். இரண்டாவது இன்னிங்சில் இரண்டு 'பிடி' எடுத்ததால் எண்ணிக்கை 8ஆக மாறியது. இதன்மூலம், ஒரே டெஸ்டில் அதிக 'பிடி' எடுத்த இந்திய விக்கெட் காப்பாளர்கள் பட்டியலில் தோனி, மொங்கியாவுடன் 2ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் சகா (எதிர் தென்னாபிரிக்கா, கேப்டவுன், 2018, 10 'கேட்ச்) உள்ளார்.

**பும்ரா காயம்**

அஷ்வின் வீசிய ஆட்டத்தின் 38 ஆவது ஓவரின் 4ஆவது பந்தை மார்ஷ் அடித்தார். பந்தை பிடிக்க முயற்சித்த பும்ரா கீழே விழுந்தார். இதில், இவரது இடது தோள்பட்டை பகுதியில் காயம் ஏற்பட்டது. 'பிசியோதெரபிஸ்ட்' முதலுதவி சிகிச்சை அளித்தபோதும், பும்ரா மைதானத்திலிருந்து வெளியேறினார். மீண்டும் களமிறங்கிய இவர் 45ஆவது ஓவரை வீசினார்.

**சச்சினுக்கு பின்...**

புஜாரா இரு இன்னிங்சையும் சேர்த்து (246,204 ) மொத்தம் 450 பந்துகளை எதிர் கொண்டார். இதன் மூலம், அவுஸ்திரேலிய மண்ணில் ஒரே டெஸ்டில் அதிக பந்துகளை சந்தித்த 2ஆவது இந்திய வீரரானார். இதற்கு முன், ஜாம்பாவன் சச்சின் 525 பந்து களை (சிட்னி, 2004) எதிர் கொண்டிருந்தார்.

**4 ஓட்டங்கள் 4 விக்.,**

இந்திய அணி 102 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களை எடுத்திருந்தது. துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து வெளியேற, கூடுதலாக 4 ஓட்டங்கள் எடுப்பதற்குள் கடைசி 4 விக்கெட்டுக்களை பறிகொடுத்து ஆட்டமிழந்தது.

**இது கடினம்**

அடிலெய்ட் மைதானத்தில் இதுவரை அதிகபட்சமாக 315 ஓட்டங்கள்தான் வெற்றிகரமாக 'சேஸ்' செய்யப்பட்டுள்ளது. இதை, இங்கிலாந்துக்கு எதிராக 1902ல் அவுஸ்திரேலியா எட்டியது. எனவே, இந்தியாவின் தற்போதைய இலக்கை எட்டுவது மிகவும் கடினம்.

**15**

இந்திய அணி அசத்தினால் அடிலெய்ட் மைதானத்தில் 15 ஆண்டுக்குப்பின் முதல் டெஸ்ட் வெற்றியை பதிவு செய்யலாம். கடைசியாக, 2003ல் 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வாகை சூடி இருந்தது.

# பங்களாதேஷ் வெற்றி

மே.தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் முஷ்பிகுர் ரஹிம் அரைச்சதமடித்து கைகொடுக்க, பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி டாக்காவில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மே.தீவுகள் அணிக்கு பவெல் (10), டரன் பிராவோ (19) ஏமாற்றினர். ஷேய் ஹோப் (43), மார்லன் சாமுவேல்ஸ் (25), ரோஸ்டன் சேஸ் (32), கீமோ போல் (36) ஓரளவு கை கொடுத்தனர். 50 ஓவர்கள் நிறைவில் மே.தீவுகள் அணி 9 விக்கெட்டுக் களை இழந்து 195 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் முஸ்தபிசுர் ரஹ்மான், மொர்டசா தலா 3 விக் கெட்டுக் களைக் கைப் பற்றினர்.

சுலப இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (12), இம்ருல் கெய்ஸ் (4) ஏமாற்றினர். லிட்டன் தாஸ் (41), சகிப் அல் ஹசன் (30) நம்பிக்கை அளித்தனர். பொறுப்பாக ஆடிய முஷ்பி குர் ரஹிம் அரைச் சதம் கடந்து வெற்றிக்கு வித்திட் டார்.

பங்களாதேஷ் அணி 35.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட் டங் கள் எடுத்து வெற்றி பெற்றது. முஷ்பி குர் ரஹிம் (55), மகமதுல்லா (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



அரைச்சதமடித்து பங்களாதேஷின் வெற்றிக்கு வழிகோலிய ரஹீம்

## கண்ணீர் அஞ்சலி

வலம்புரி குடும்பத்தைச் சேர்ந்த
திரு. நா. சண்முகானந்தன்
அவர்களின் மைத்துனி

திருமதி
**ஜெயவாணி சிவபாதசுந்தரம்**
(அல்லைப்பிட்டி)



அவர்கள் லண்டனில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி குடும்பம்

# அரசியல் நெருக்கடி நிலையால் காணாமற் போனோர் அலுவலக செயற்பாடுகள் முடக்கம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை காரணமாக காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. காணாமல் போனவர்களின் குடும்பங்களுடனான திட்டமிடப்பட்ட கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை என காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் உறுப்பினர் மிராக் ரஹீம் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்தோடு காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், கடந்த 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் மற்றும் அதன் பின்னர் காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன், குறிப்பாக வடக்கு, கிழக்கில் மற்றும் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர் கடந்த செப்டெம்பர் மாதம், காணாமல் போனோர் அலுவலகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்கால பரிந்துரைகளை கொண்ட இடைக்கால அறிக்கை ஒன்றை வழங்கியது.

இதில், காணாமற் போன ஆட்களைத் தேடுதல் மற்றும் தேடிக் கண்டுபிடித்தல், உரிய இழப்பீட்டு மார்க்கங்களை அறிமுகப்படுத்துதல், அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்படுத்துதல், உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்கள், அரச நிறுவனங்களுடனான கலந்தாலோசித்தலும் ஒத்துழைப்பு, காணாமற்போன ஆட்கள்பற்றிய பெயர்ப் பட்டியலைத் தயாரித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இதன் பின்னர் நாட்டில் அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அதன் பணிகள், செயற்பாடுகள் அனைத்தும் முடங்கிப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
10
1936

மறைவு
21
11
2017



### திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி

ஓராண்டு ஆனாலென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
ஓயாது உங்கள் நினைவு காலம் எல்லாம் எம்மை
கண்போல காத்த எங்கள் அன்புத் தெய்வமே
கலங்குகின்றோம் உங்கள் குரல் காணாது
ஏனம்மா எமையெல்லாம் ஏங்க வைத்துச் சென்றீர்
தேடுகின்றோம் விழி வழியும் கண்ணீருடன்...

(7828)

பாரதி பவளம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

அன்புப் பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அப்பாச்சியால் அமைச்சுப் பதவி போய்விட்டது

# பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நாடு

## விஜயமுனி சொய்சா கவலை



(களுத்துறை)

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும், அதனை எவரும் மறைக்க முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நெருக்கடியை ஏற்படுத்தியவர்கள் எவரும் இந்த இழப்பை ஈடு செய்ய மாட்டார்கள் எனவும் சாதாரண மக்களே அதனை ஈடு செய்ய நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனால், பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டியது அனைவரதும் கடமை.

அரசாங்கத்தை அமைத்த பின்னர் தேர்தலுக்கோ அல்லது வேறு தீர்வுக்கோ செல்லலாம். நாங்கள் அப்பாச்சியை பிரதமராக்கினோம். எமக்கு அமைச்சர் பதவி பறிபோய்விட்டது. எமக்கு நீதிமன்றத்திற்கும் செல்ல நேரிட்டுள்ளது. நான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணையமாட்டேன்.

குமார வெல்கம போல் நானும் சிறந்த சுதந்திரக்கட்சிக்காரன் எனவும் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார். (இ-7)

# யானைகளைத் துரத்த ட்ரோன் கமராத்திட்டம்

(புத்தளம்)

கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகளைத் துரத்துவதற்காக முதற் தடவையாக ட்ரோன் கமராவைப் பயன்படுத்தும் நடவடிக்கையானது வனஜீவராசிகள் திணைக்களத்தால் புத்தளம்- கல்லடி, கலேவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.



புத்தளம், ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள காடுகள் மற்றும் திறந்த வெளிகளில் 50 இற்கும் மேற்பட்ட யானைகள் காணப்படுவதாகவும் குறித்த யானைகள் கிராமங்களுக்குள் நுழைந்து பயிர்கள், மனித உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவும் இதனைத் தடுப்பதற்காக ட்ரோன் கமராவைப் பயன்படுத்த திட்டமிட்டதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பிரதேச செயலாளர், இலங்கை விமானப் படையினரிடம் விடுத்த கோரிக்கைக்கமைய அநுராதபுரம் விமானப்படை முகாம் அதிகாரிகளால் இது செயற்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கமரா மூலம் யானைகள் இருக்குமிடத்தை அடையாளங் கண்டு அவற்றைக் காடுகளுக்குத் துரத்துவதற்காகக் குறைந்தளவு காலச் செலவே ஏற்படுமெனவும் இதன் மூலம் யானைகள் மீது மேற்கொள்ளப்படும் துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட தாக்குதல் சம்பவங்களும் குறைவடையுமென புத்தளம் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சேகரிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், போசனசுகமுண்டு.

**மேடம்:** ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் குறையும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** சிரித்துப் பேசும் நண்பர்களினால் சில சிக்கல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**கும்பம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடி கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், கௌரவமான நாள்.

**மகரம்:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாழ்க்கைத் தரம்உயர வழிவகை செய்வீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை<br>மாலை 5.17 மணிக்கு<br>மகர- சந் | | ராகு |
| கேது | | | |
| சனி<br>சந் | குரு.சூரி<br>புத | சுக் | |

10.12.2018
கார்த்திகை 24, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு
திருதியை பிற்பகல் 5.38 மணிவரை
பூராடம் முற்பகல் 10.57 மணிவரை
சுபநேரம் 12.19-1.49 மணிவரை
இராகுகாலம் 7.49-9-19 மணிவரை

வளவன்

**தனுசு:** சவால்களை சமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர்களின் வருகையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

# மஹா கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

விநாயகர் விரதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை மறுதினம் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மஹா கணபதி ஹோமமும் மாலை 4.30 மணிக்கு கஜமுகாசூரன் போரும் இடம்பெறும்.

மறுநாள் 13 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்திப் பூஜை வசந்த மண்டப பூஜையுடன் விநாயகர் திருவீதி வலம் வருதலைத் தொடர்ந்து பெருங்கதைப் படிப்புப் பூர்த்தியாகும் என ஆலயப்பிரதமகுருசிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் தெரிவித்துள்ளார். (இ)

# ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரவெட்டி கிழக்கு பிரதேச செயலக பிரிவின் ஜே/368கிராம உத்தியோகத்தர் பிரிவில்,18 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள சவுரியந்தோட்டஞான வைரவர் ஆலய புனர்நிர்மாண பணிகள் வைபவ ரீதியாக நேற்றுக் காலை அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னாள் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனின் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பணிகள் இடம்பெற உள்ளமை குறிபபிடத்தக்கது. சௌந்தராஜன் தலைமையில் இடம்பெற்றிருந்த நிகழ்வில் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகளும், பிரதேச சபை உறுப்பினர்களான வைத்தியநாதன், விஜிதரன், கம்லநாயகி மற்றும் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அதிபருமான கணேமூர்த்தி, இணைப்பாளர்களான இனியவன், கோகுலன் ஆகியோர் விவசாய பிரதி அமைச்சர் சார்பாக அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-30)

# குடி தண்ணீர் தட்டுப்பாடு கட்டுடை மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்குப் பிரதேசசபைக்குட்பட்ட கட்டுடை பிரதேசத்திற்குப் பிரதேச சபை யால் வழங்கப்படும் குடி தண்ணீர் அப் பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு போதாமல் இருப்பதாகக் கட்டுடை பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையால் வாரத்திற்கு ஒரு முறை மட்டும் குடி தண்ணீர் வழங்கப்படுவதாகவும் இந்நீர் தமது பயன்பாட்டிற்கு போதாமல் இருப்பதாகவும் பல கிலோ மீற்றர் சென்றே குடி தண்ணீரைப் பெறுவதாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதி மக்களின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினரால் கட்டுடைப் பிரதேசத்தின் மத்தியில் நீர்த் தாங்கிக் கட்டப்பட்ட போதும் இம் மக்களின் பயன்பாட்டிற்காக இதுவரை வழங்கவில்லையென குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே தமது குடி தண்ணீர்ப் பிரச்சினைக்கு வலி. தென்மேற்குப் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில்வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசனைத் தொடர்பு கொண்ட போது குறித்த விடயம் தொடர்பாக இப்போது தான் தான் அறிவதாகவும் ஒரு வாரத்திற்குள் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார். (இ)

# மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

(கரணவாய்)

யாழ்.கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் தரம் ஐந்து புலமைப் பரிசில் தகுதி பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று 10 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கரவெட்டி மத்தி கிராம உத்தியோகத்தர் அலுவலக மண்டபத்தில் கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.ஆனந்தக்குமாரசுவாமி தலைமையில் நடை பெறும். (இ-5-60)

# வரவு-செலவுத் திட்டத்தை நிராகரித்தது ஏன்?

## த.தே.ம.முன்னணி உறுப்பினர்கள் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு- மேற்கு பிரதேச சபையில் தவிசாளரால் கடந்த 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டப் பிரேரணையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களாகிய நாம் பின்வரும் காரணங்களுக்காக நிராகரிக்க முடிவு செய்தோம்.

குறித்த வரவு-செலவுத் திட்டமானது என்ன கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பது தொடர்பான கொள்கை விளக்கங்கள் ஏதும் தவிசாளரால் எழுத்து மூலமாக எமக்கு வழங்கப்படவில்லை. தவிரவும் தவிசாளரால் அது பற்றியதான கொள்கை விளக்கங்கள் கூட சபையில் வெளிப்படுத்தப்படவுமில்லை.

சமர்ப்பிக்கப்பட்ட குறித்த வரவு- செலவுத் திட்டப் பிரேரணையில் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டில் கரவெட்டிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பது பற்றியதான எவ்வித தகவல்களும் உள்ளடக்கப்படவில்லை.

மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களால் பெயர் குறித்து ஒதுக்கப்படும் நிதிகள் தவிர எதிர்வரும் ஆண்டில் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெறும் ஏனைய அமைச்சர்கள் மாவட்டக் காரியாலயம் மற்றும் ஏனைய திணைக்களங்கள் மூலமான நிதிகள் தொடர்பான பிரேரணைகள் சபையில் மேற்கொள்ளப்படும் தீர்மானம் மூலமே தயாரிக்கப்பட வேண்டுமென்ற எமது கோரிக்கையைத் தவிசாளர் நிராகரித்துள்ளார்.

கடந்த எட்டு மாதங்களில் எம்மால் முன் மொழியப்பட்ட கோரிக்கைகளில் பெரும்பாலானவை.

தவிசாள ரால் இதுவரை கவனத்தில் கொள்ளாமையுமான காரண ங்களுக்காகவே நாம் மேற்படி அறிக்கையை நிராகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம் என்பதை அனைத்துப் பொது மக்களின் கவனத்திற்கும்கொண்டு வருகின்றோம் என த.தே.ம.முன்னணி உறுப்பினர்கள் ஏழு பேரும் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


# ‘நாட்டியக் கலை அரங்கம்’

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் 7 ஆம் நாள் நிகழ்வான "நாட்டியக் கலை அரங்கம்" நாளை 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணியள வில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி செல்லையா ஐயர் திருமண மண்டபத்தில் பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எஸ்.ஆர். றொபின்சன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை பெரும்பாக உத்தியோகத்தர், சைவப் புலவர் கலாபூஷணம் ச.உருத்திரேஸ்வரன், கலாபூஷணம் நாடகச் சிகரம் வெ. முத்துச்சாமி ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# துவிச்சக்கர வண்டி வழங்கல்



பருத்தித்துறை பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் 5 ஆம் வட்டார உறுப்பினர் க.ஸ்ரீகாந்தரூபன் ஐந்து பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகளை வழங்கினார். (இ-60)

# அரசியல்வாதி அடாவடித்தனம் மக்களின் விருப்பத்தை மீறி சுடலை அமைக்க முயற்சி

## போராட்டம் நடத்தப்படுமென எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் பல இன்னும் பூர்த்தியாக்கப்படாமல் உள்ள நிலையில் அம் மக்களின் விருப்பத்தை மீறி அரசியல்வாதி ஒருவர் அடாவடித்தனமாக புதிய சுடலை அமைக்க முயற்சிப்பதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

27 வருடங்களுக்கு மேலாக நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த ஆவனை, தையிட்டி மக்களுக்கு மீள்குடியேற்றத்தின் போது புதிய துறைமுகம் ஒன்றை தமது வாழ்வாதாரத்துக்காக உருவாக்கித் தருவதாக உறுதியளித்த போதும் இன்றுவரை அத்திட்டம் தமக்கு கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு துறைமுகம் உருவாக்கித் தருவதாக கூறப்பட்ட இடத்தில் சுடலை அமைக்க நினைப்பது வேடிக்கையான செயலாகும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

சுமார் 400 குடும்பங்களை உள்ளடக்கிய தமது பிரதேசத்தில் 200 மீற்றர் தூரத்தில் அம்பத்தை இந்து மயானம் இருக்கின்ற போது தமது பிரதேச மக்களின் விருப்பத்தை மீறி புதிய சுடலை அமைப்பதற்கான காரணம் என்ன? எனக் கேள்வியெழுப்பியுள்ளனர்.

புதிய சுடலை அமைக்கவிருக்கும் இடத்தில் மக்களுக்கு தேவையான சந்தைத் தொகுதி, மீனவர்கள் இளைப்பாறும் மண்டபம் வாடிகள் அமைத்துத் தர கோரிக்கை விடுத்தும் சுடலை அமைப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சுடலை ஒன்று இருப்பதாகவும் இன்னுமோர் சுடலை வேண்டாம் எனத் தெரிவித்து அப்பகுதியில் உள்ள ஜே/ 246, கண்ணகி சனசமூக நிலையம், ஜே/ 247 திருவள்ளுவர் சனசமூக நிலையம்,ஜே/ 249 கலைநங்கை சனசமூக நிலையம், ஜே/ 231 நல்லிணக்கபுர சனசமூக நிலையம், ஜே/ 233 நல்லிணக்க புர சனசமூக நிலையம், ஜே/ 248 கிராம கோட்டடி சனசமூக நிலையம், ஜே/250 தையிட்டி தெற்கு சனசமூக நிலையம், ஜே/ 241 வறுத்தலைவிளான் சனசமூக நிலையம் ஆகியவற்றின் எதிர்ப்புக்களையும் மீறி ஐந்து கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ஒரு சில குடும்பங்களின் சுயநல நோக்கத்தை நிறைவு செய்வதற்காகவோ குறித்த அரசியல்வாதி புதிய சுடலை அமைக்க முன்னிற்பதாக மேற்குறிப்பிட்ட சமூக சேவை நிலையங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

மக்களின் வாக்குகளால் ஆட்சிப்பீடம் ஏறுபவர்கள் மக்களின் தேவைகளை முதலில் உணர வேண்டுமெனவும் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக ஓர் திட்டத்தை திணிக்க முயல்வது மக்களின் உரிமையை பறிக்கும் செயல் என பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே மக்கள் நலன் சார் விடயங்களைக் கருத் தில் கொள்ளாது மக்களின் விருப்பத்தை மீறிசெயற்பட்டால் குறித்த அரசியல்வாதிக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்த வேண்டியேற்படும் என பாதிக்கப்பட்ட மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# வீட்டுத்திட்ட தெரிவில் திருப்தியில்லை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் திருப்தியில்லை என சாவகச்சேரி பிரதேச சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சியில் கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளில் வசதி படைத்தவர்கள் மற்றும் வீடு உள்ளவர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதேவேளையில்வன்னி இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உறவுகளை இழந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

பயனாளிகள் தெரிவு மீளாய்வு செய்யப்பட்டு தகுதியானவர்கள் உள்வாங்கப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-29-30)

# சர்வதேச மனித உரிமைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மனித உரிமைகள் முதலுதவிச் சங்கம் மற்றும் இலங்கை தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் யாழ்ப்பாண மனித உரிமை முதலுதவிச் சங்க உறுப்பினர் முத்துக்குமாரு உதயஸ்ரீ தலைமையில் இடம்பெறும்.

இதில் விருந்தினர்களாக யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்,கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மா.பெ. மூக்கையா,யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக் குழு பிராந்திய ஆணையாளர் ரி.கனகராஜ்,காங்கேசன்துறைப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் பி.யு.உடுகம சூரிய, இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழக தலைவி செல்வி சி.சூரியகுமாரி, இலங்கை தேசிய சமாதான பேரவை இணைப்பாளர் மற்றும் ஆலோசகர் ந.விஜயகாந்தன், நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் த.கனகராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-4-60)

# 5 அமைச்சுக்களின் செயலாளர்களை விசாரணைக்குட்படுத்த வேண்டும்



## சபாநாயகரிடம் ஐ.தே.முன்னணி பிரேரணை

(கொழும்பு)

**நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து 5 அமைச்சுக்களின் செயலாளர்களை விசாரணைக்குட்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய முன்னணியினர் பிரேரணை ஒன்றினை சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு வழங்கியுள்ளனர்.**

அத்தோடு நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகத்துக்கும் குறித்த பிரேரணையை நேற்று ஞாயிற்றுக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதில் குறித்த 5 அமைச்சுக்களின் செயலாளர்களும் நாடாளுமன்ற குழுவிற்கு (நாடாளுமன்ற உத்தரவாதங்கள் குழு, நிதி குழு, பொது கணக்காய்வு குழு) முன்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சட்டவிரோத பிரதமரின் செயலாளராக இருந்த எஸ்.அமரசேகர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். அடிகல்ல, வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சக செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ விவகாரங்களுக்கான வசந்த பெரேரா, வீடமைப்பு மற்றும் சமூக நலத்துறை உபாலி மாரசிங்க மற்றும் எஸ்.டி கொடிகார முதல் முறையாக அழைக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, நாடாளுமன்றில் பிரதமர் மற்றும் அனைத்து அமைச்சு அலுவலகங்களுக்குமான நிதியை இரத்து செய்யும் ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றிய பின்னர் அமைச்சரகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டனவா என்பது தொடர்பில் விசாரிக்க வேண்டும் என பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேலும் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் நாடாளுமன்றக் குழுக்கள் அவற்றை கேள்விக்கு உட்படுத்துவதற்கு சட்ட அதிகாரம் கொண்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை கடவுச்சீட்டின் தரம் உயர்வு

(கொழும்பு)

இலங்கைக் கடவுச்சீட்டு, சர்வதேச வகைப்படுத்தலில் தரம் உயர்ந்துள்ளது.

கடந்த வருடத்தை விட 9 இடங்கள் முன்னேறி இந்த வருடம் 84 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

விசாவின்றி நாடுகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பு, வருகை தரும் வாய்ப்பு மற்றும் அந்நாட்டின் மனிதவள அபிவிருத்தி சுட்டெண் ஆகியவை இந்த வகைப்படுத்தலுக்காக பயன்படுத்தப்படுகிறது.

தற்போது இலங்கைக் கடவுச்சீட்டின் ஊடாக 16 நாடு களுக்கு விசாவின்றி பயணிக்க முடிவதோடு. இந்நாட்டுக்கு வந்து விசா பெறக் கூடிய நாடுகளின் எண்ணிக்கை 29 ஆகும்.

எனினும் இலங்கைக் கடவுச்சீட்டின் ஊடாக 153 நாடு களுக்கு செல்ல விசா அனுமதி பெறவேண்டும்.

சர்வதேச வகைப்படுத்தலில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் கடவுச்சீட்டு முதல் இடத்தில் உள்ளதோடு, அந் நாட்டின் கடவுச்சீட்டு ஊடாக 127 நாடுகளுக்கு விசாவின்றி பயணிக்க முடியும்.

இதில் சிங்கப்பூர் கடவுச்சீட்டு இரண்டாவது இடத்திலும், ஜேர்மன் கடவுச்சீட்டு மூன்றாவது இடத்திலும் உள்ளன. (இ-7)

### நாமலின் தொலைபேசியுடன்

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் கொங்ஹொங் நோக்கிப் பயணம்

(கொழும்பு)

நாமல்குமாரவின் தொலைபேசியை எடுத்து கொண்டு குற்றப் புலனாய்வுப் திணைக்களம் மற்றும் இரசாயன பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு கொங்ஹொங் நோக்கி பயணித்துள்ளனர்.

இவர்கள் குறித்த தொலைபேசியில் அழிக்கப்பட்டதாக கூறப்படும் ஒலி பதிவுகளை பரிசோதனை செய்ய சென்றுள்ளனர். (இ-7)

### காணிப்பிரச்சினை காரணமாக

## கூரிய ஆயுதத்தால் தாக்கி அண்ணனைக் கொன்ற தம்பி

(ஊருபொக்க)

ஊருபொக்க, ஹீகொட பகுதியில் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 7.30 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட காணிப் பிரச்சிணை காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

75 வயதுடைய மூத்த சகோதரனே இவ்வாறு தம்பியின் தாக்குதலால் உயிரிழந்துள்ளார். கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் ஊருபொக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மைத்திரியிடமிருந்து சு.கவின் தலைமையை கைப்பற்றுவோம்

## பியசேன கமகே திட்டவட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து மைத்திரிபால சிறிசேனவை நீக்கிவிட்டு கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்ற தான் உட்பட ஒரு குழு தயாராக உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

"நான் ஸ்ரீ ல.சு.கட்சியை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டேன். எதிர்த்தரப்பில் இணைந்து கொண்டாலும் இன்றும் நான் சிறந்த ஸ்ரீ ல.சு.கட்சிக்காரன்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழித்து விட்டார். நாட்டையும் நாசமாக்கியுள்ளார். கட்சி உறுப்பினர்களை போக இடமில்லாதவாறு தனிமைப்படுத்தியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன கட்சித் தலைவராக இருக்கும் வரையில் நாம் கட்சிக்கு எந்த ஒத்துழைப்பையும் வழங்கப் போவதில்லை.

எமது நோக்கம் கட்சியை நேசிக்கும் சகலரையும் இணைத்துக் கொண்டு ஸ்ரீ ல.சு. கட்சியையும், நாட்டையும் பாதுகாப்பதாகும்.

இதற்காக பாரியளவிலான வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம் எனவும் கமகே எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)


## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

### பயிற்சி கிளை முகாமையாளரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

➢ **பயிற்சி கிளை முகாமையாளர்**

**வயதெல்லை:-** 18 தொடக்கம் 45 வருடங்கள் வரை

**கோரப்படும் தகைமைகள்**

கூட்டுறவுப்பணியாளர் சாதாரண தரப் பத்திரம் சித்தி /க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம் / வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்கள / தமிழ்பாஷை என்பனவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் பெற்றுள்ள சித்தி.

**குறிப்பு**

பயிற்சிக்காலத்தின் போது நாளாந்த படியாக ரூபா 600/- வழங்கப்படும். பயிற்சியை திருப்திகரமாக நிறைவு செய்பவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை **பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி** என்ற முகவரிக்கு 21.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

(C-4650)

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்


### இடைக்கால அரசிற்கு விதிக்கப்பட்ட

## தற்காலிக தடையுத்தரவால் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி



(கொழும்பு)

இடைக்கால அரசாங்கத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்காலிக தடையுத்தரவை பிறப்பித்தமையின் காரணமாக பொருளாதார நெருக்கடிகள் தீவிரமடைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.


வஜிராஷ்ரம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் இல்லாத காரணத்தால் வடக்கின் பாதுகாப்பை பலப்படுத்த ஐ.நா. அமைதி காக்கும்படையினரை பணிக்கு அமர்த்துமாறு எதிர்த்தரப்பினர் குறிப்பிட்டுள்ளமையானது ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் பாதுகாப்புநிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடமே காணப்படுகின்றது. இடைக்கால அரசாங்கத்தில் வடக்கு- கிழக்கு தொடர்பில்அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# கோவில்குளம் சிவன் கோவில் விடுதியில் திருடர்கள் கைவரிசை

## கேணிக்கு அருகில் உண்டியல்கள், கம்பிகள் மீட்பு





(குருமன்காடு)

வவுனியா, கோவில்குளம் சிவன் கோவில் மற்றும் விடுதி ஆகியவற்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை ஆலயத்திற்கு பூசை செய்வதற்காக பூசகர்சென்ற போது திருட்டுக்கள் இடம்பெற்றமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து ஆலய நிர்வாகத்தால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கோயில் குளம் சிவன் கோயில் வெளி வீதியில் உள்ள பிள்ளையார் விக்கிரகத்தின் முன்னாள் இருந்த உண்டியல் திருடப்பட்டுள்ளது. அத்துடன், ஆலயத்திற்குள் நுழைந்த திருடர்கள் ஆலய உள் வீதியில் காணப்பட்ட உண்டியல் ஒன்றினையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட இரண்டு உண்டியல்களும் ஆலயக் கேணிக்கருகில் உடைக்கப்பட்ட நிலையில் வெறுமையாக மீட்கப்பட்டது. அத்துடன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள விடுதிக்குள்ளும் கூரை வழியாக நுழைந்த திருடர்கள் விடுதியில் இருந்த புதிய ஆடைகள் உள்ளிட்ட சில பெறுமதியான பொருட்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

குறித்த இரு உண்டியல்களும் கடந்த 6 மாதமாக திறந்து பணம் எடுக்கப்படாமல் இருந்தமையால் அவற்றில் இலட்சக்கணக்கில் பணம் இருந்திருக்கலாம் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஆலய கேணிக்கு அருகில் உடைக்கப்பட்ட உண்டியல்கள், உண்டியல் உடைக்கப் பயன்படுத்தப்பட்ட கம்பிகள், திருடப்பட்ட ஆடைகள் சில பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (2-250)

# கலாசாரப்பேரவை பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-84)


# வீதிகளின் திருத்த வேலைகள் ஆரம்பம்

(பூநகரி)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேசத்தில் 14 வீதிகளை உடனடியாக திருத்த நடவடிக்கை எடுக்குமுகமாக தலா 2 மில்லியன் ரூபா வீதம் 28 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேசசபை தவிசாளர் அ.ஜயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக சாமிப்புலம்-முக்கொம்பன்வீதி, கௌதாரிமுனை மறவன்குளவீதி, வெட்டுக்காடு வீதி, மதனி குடியிருப்பு வீதி, ஜெயபுரம் பிள்ளையார் கோயில் வீதி, கெம்பன் குண்டு-பல்லாய் வீதி, முழங்காவில் குருபரன் வீதி, மறவகுறிச்சி-கோபால பிட்டிவீதி உட்பட பல வீதிகளின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப் படுகின்றது. (2-84)

# பேருந்து தரிப்பு நிலையம் விரைவில் திறக்கப்படும்



(பூநகரி)

பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதனால் பன்முகப்பட்ட வரவு-செலவுதிட்ட நிதியில் 5 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு பூநகரி மத்திய சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பு நிலைய வேலைகள் முடிவுற்ற நிலையில் அடுத்த வாரமளவில் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிக்கப்படுகின்றது. (2-84)



வவுனியா தோணிக்கல் "நம்பிக்கையின்வாசல்" முன்பள்ளியின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் முன்பள்ளி பாடசாலை மண்டபத்தில் ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது புதிதாக பாடசாலையில் இணையவிருக்கும் சிறார்களுக்கு பதக்கம் சூட்டி நினைவுப் பரிசும் வழங்கப்படது. சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

சிறைச்சாலையில் இருக்கும் மகனுக்கு

# ஹெரோயினை வழங்க முற்பட்ட குற்றச்சாட்டில் தந்தை கைது

(கிளிநொச்சி)

வவுனியா மத்திய சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து மகனுக்குக் கொடுக்க முற்பட்ட தந்தையை நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் சிறைச்சாலை அதிகாரிகளின் சோதனையின் போது தம்வசம் வைத்திருந்ததன் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சிறையில் உள்ள மகனைப் பார்வையிட்டு பொருட்கள் கொடுப்பதற்காக நேற்று முன்தினம் மதியம் தந்தை சிறைச்சாலை வளாகத்தினுள்சென்றுள்ளார். கொண்டு சென்ற பொருட்களில் சவர்க்காரத்தை வெட்டி அதனுள் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து வைத்து மகனுக்குக் கொடுக்க முற்பட்ட சமயத்திலே தந்தையைக் கைது செய்துள்ளதாகவும்தெரிவித்துள்ளனர். நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் நமசிவாயம் என்ற 71 வயதுடையவரிடமிருந்து 45 மில்லிகிராம் ஹெரோயினை மீட்டுள்ளதாகவும் மகனும் ஹெரோயின் வைத்திருந்ததன் குற்றச்சாட்டிலே சிறைச்சாலைக்கு சென்றிருந்தார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2)



கிளிநொச்சியில் நேற்றும் இன்றும் "வன்முறையற்ற வாழ்வை கொண்டாடுவோம்" எனும் கண்காட்சி இடம்பெற்று வருகின்றது. இதன்போது சமூகத்தில் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற பல்வேறு விதமான சமூக வன்முறைகளை வெளிப்படுத்தும் வகையிலும் கலாசாரத்தின் பேரால் பெண்கள் மீது திணிக்கப்படுகின்ற வன்முறைகள் பற்றியும் பல விதமான ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தை அதிகாரிகள் கவனத்தில் கொள்வார்களா?



(பூநகரி)

கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியின் அருகே அமைந்துள்ள கிறிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தைப் பல தரப்பினரும் கண்டும் காணாத நிலையில் குண்டும் குழியுமாகப் பேருந்துகளை நிறுத்த முடியாமலும் பயணிகள் சேறும் சகதியைக் கடந்து பேருந்தினுள் ஏறி பிரயாணம் செய்ய வேண்டிய அவல நிலையைப் பொது அமைப்புக்களும் பேருந்து சாரதிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தனியார் பேருந்துகள், அரச பேருந்துகளென சுமார் 50 இற்கும் மேற்பட்ட பேருந்துகள் இந்நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கும் உள்ளூர் சேவையிலும் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். பேருந்து நிலைய தரிப்பு நிலையக் கட்டடவேலை ஆரம்பிக்கப்பட்டு இருவருடமாகியும் முடிவுறாத நிலையில்வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-84)

## மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு

# தொழிலாளர்களின் உரிமையை வலியுறுத்தி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு போராட்டம்






(பரந்தன்)

மனித உரிமை தினத்தை முன்னிட்டு கிளிநாச்சி மாவட்ட வர்த்தக தொழில் பொதுத்தொழிலாளர் சங்கத்தினரால் தொழில் புரியும் இடங்களில் ஆண், பெண் தொழிலாளர்களின் உரிமையை வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம்நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் இடம்பெற்றது.

"தொழில் புரியும் இடங்களில் ஊழியர்கள் மீதான வன்முறையை நிறுத்து" எனும் தொனிப்பொருளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் உரிமைகள், பெண்கள் மீதான வன் முறை, வேலை நேரம் மற்றும் விடுமுறை நாட்களில் தொழிலாளர்களை வேலை வாங்குதல் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி குறித்த போராட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் பொதுச்சந்தைக்கு முன்பாக குறித்த போராட்டம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது. ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அவர்கள்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் புரியும் இடங்களில் அவர்களிற்குரிய சம்பளம் வழங்கப்படுவதில்லை. அவர்கள் அதிக. நேரம் வேலை வாங்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தொழில் உரிமையை மீறும் வகையில் தொழில் வழங்குநர்கள் இவ்வாறு செயற்படுவதாக தெரிவிக்கும் அவர்கள், அதற்கெதிராக இன்று குறித்த போராட்டம் தம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கின்றனர். பத்து மணி நேரம், பன்னிரெண்டு மணி நேரம் என பல்வேறு தொழில் வழங்குநர்கள் தொழிலாளர்களை வருத்துகின்றனர்.

இதனால் எதிர்கால த்தில் எமது மாவட்டத்தில்பல்வேறு நோய்த்தாக்கங்கள் ஏற்படும் என ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை இன்று மலையகத்தில் மக்கள் இவ்வாறு தமது உரிமைக்காக போராடி வருகின்றனர். தமது நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு தெரிவித்து பல்வேறு போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவர்கள் கோரும் கோரிக்கை நியாயமானது எனவும் இவர்கள் தெரிவித்தனர். (2-312-315)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(குருமன்காடு)

வவுனியா தெற்கிலுப்பைக்குளத்தை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவை ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங் கும் நிகழ்வு சமூக ஆர்வலர் இ.சுவேந்திரன் தலைமையில் தெற்கிலுப்பைக் குளத்தில் அமைந்துள்ள கலைமகள் முன்பள்ளியில் வைத்து நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த திருமதி பி.நீரஜாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது நிதிப் பங்களிப்புடன் புத்தகப்பையுடன் கூடிய அப்பியாச புத்தகத் தொகுதிகள் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

இக்கற்றல் உபகரணாங்களை சர்வதேச இந்து இளைஞர்பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார், அன்பே சிவம் இணைப்பாளர் ப.மணிவண்ணன்,வவுனியா நகர சபை உறுப்பினர் செ.மதியழகன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உறுப்பினர் க.கணேசலிங்கம் மற்றும் கோ.கேசவன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (2-250)

## இந்து மயான மண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டல்





(பனிக்கன்குளம்)

வவுனியா சாந்த சோலை இந்து மயான அஞ்சலி செலுத்தும் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் சாந்த சோலைசனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளருமான கே. காதர் மஸ்தானின் குறித்தொதுக்கப்பட்ட வருடாந்த நிதியிலிருந்து 7.5மில்லியன் ரூபாவில் அமைக்கப்படவுள்ள அஞ்சலி செலுத்தும் மயானக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்களான கே. எம். ஆப்தீன், ஜே.எம். பசீர் தலைமையில் நாட்டிவைக்கப்பட்டது.

சனசமூக நிலையத்தின் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்,உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (2-281)

## பெண் தலைமைக் குடும்பத்திற்கு வர்த்தக நிலையம் கையளிப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா தேக்கவத்தை பகுதியில் கணவனை இழந்து 4 பிள்ளைகளுடன் வசித்துவரும் பெண் தலைமைக்குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார உதவியாக வர்த்தக நிலையம் அமைத்துக் கொடுத்து உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினரால் அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் டீரன் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியில் குறித்த பெண் தலைமைக் குடும்பத்திற்கு தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரின் ஊடாக நேற்று முன்தினம் வர்த்தக நிலையம் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு பெண் தலைமைக்குடும்பத்தின் வீட்டில் இடம்பெற்றது. அமைத்துக்கொடுக்கப்பட்ட வர்த்தக நிலையம் சமூக ஆர்வலர்களினால் திறந்துவைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. (2-281)

## குழாய்க்கிணறு திருத்தி அமைப்பு



(வவுனியா)

வவுனியா பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்குரிய குழாய்க்கிணறு கடந்த மூன்று வருடங்களாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இது குறித்து பல முறைப்பாடுகள் நகரசபையினருக்கு முறையிடப்பட்டபோதும் திருத்தி அமைக்கப்படவில்லை. இதையடுத்து வவுனியா நகர உப பிதாவின் நேரடிக்கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் அதனைத்திருத்தி அமைத்து பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. (2)








வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலாசார பெருவிழா 2018 பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வில் பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துகின்ற வகையில் நடனம், கர்நாடக இசை, கிராமிய இசை, கவியரங்கம், சமூக நாடகம் என்பன நிகழ்த்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து கரையெழில் ஏழு எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலை மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வெளியிட்டு வைக்க தொழிலதிபர் லு.சுலோகா பெற்றுக்கொண்டார். (படங்கள்:- கண்டாவளை, பரந்தன் செய்தியாளர்கள்)

## அரசு இல்லை; மனிதப் படுகொலைகள் இடம்பெற வாய்ப்பு

# வடக்கு-கிழக்குக்கு சமாதானப்படையை அனுப்புமாறு ஐ.நா. செயலாளரிடம் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கம் ஒன்று இல்லாமல் இருக்கும் நிலையில் மனிதப் படுகொலைகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக எடுத்துக்காட்டி ஆர்.2. பி. சரத்தின்படி சமாதானப் படையொன்றை வடக்கு, கிழக்குக்கு அனுப்பி வைக்குமாறு புலம்பெயர் புலிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பன பல ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸிடம் வேண்டுகோள்விடுத்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையால் இலங்கையில் இரத்தம் சிந்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக சிங்கள அரசியல்வாதிகள் பலரும் கருத்துத் தெரிவித்து வருவதாகவும் அவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வவுணதீவு கொலைச் சம்பவம் தொடர்பில் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவத்தையும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்ற நிலைமையுடன் தொடர்புபடுத்தி தமிழர் அடக்குமுறையாக அவ்வமைப்புக்கள் ஐ.நாவில் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஐ.நாவின் ஆர்.2.பி. சரத்தின்படி ஒரு நாட்டில் பதற்ற நிலைமையொன்று ஏற்படும் போது அதில் தலையிட முடியும் எனக் கூறப்பட்டுள்ளதாகவும் சிங்கள தேசிய வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## யுத்தம் வேண்டாம்; ஒற்றுமையாய் வாழ்வோம்

# பொலிஸ் அதிகாரிகள் கொலையை கண்டித்து நேற்றும் ஆர்ப்பாட்டம்







(சித்தாண்டி)

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசத்தில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சித்தாண்டி முச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'ஆயுதக் கலாசாரத்தை ஒழிப்போம், யுத்தம் இல்லாத பூமி வேண்டும், ஒற்றுமையாய் வாழ்வோம், யுத்தம் அற்ற தேசத்தை உருவாக்குவோம், சமத்துவமாய் வாழ்வோம், பொலிஸ் எங்களைப் பாதுகாக்கிறது அவர்களை நாம் பாதுகாப்போம், அந்நிய சக்திகளை இல்லாதொழிப்போம், பயங்கரவாதம் வேண்டாம், பயங்கரவாதத்தினை இல்லாதொழித்து நல்லுறவைப் பேணுவோம், இன நல்லுறவைக் காப்போம், மீண்டும் பயங்கரவாதம் வேண்டாம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயசுந்தரவிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கையளித்திருந்தனர். (இ-7)

# மட்டக்களப்பில் 42 அடி கிறிஸ்மஸ் மரம்!



(ஏறாவூர்)

மட்டக்களப்பு-புனிதலூர்து மாதா ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள 42 அடி உயரமான கிறிஸ்மஸ் மரம் நேற்று முன்தினம் மாலை ஒளியூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை லோறன்ஸ் நிக்ளஸ் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மூன்றாவது ஆண்டாகவும் இயேசு பாலன் பிறப்பினை சிறப்பிக்கும் வகையில் இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அருட்தந்தை லோறன்ஸ் நிக்ளஸ் அடிகளாரால் விசேட பூஜை நடத்தப்பட்டு கிறிஸ்மஸ் மரம் ஒளியூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

காண்போரை வெகுவாக ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கிறிஸ்மஸ் மரத்தை பெருமளவான மக்கள் கண்டு மகிழ்ந்து வருகின்றனர். இதன்போது கிறிஸ்மஸ் தாத்தாவும் ஆடிப் பாடி மக்களை மகிழ்வித்திருந்தார். (இ-7)

# நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கண்டி)

பாராளுமன்றக் கலைப்பு தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகின பின்னர் அரசியலில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து திட்டமிடப்படவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# 13 துப்பாக்கிகள், ஒரு தொகை தோட்டாக்களுடன் இருவர் கைது

(பேருவளை)

துப்பாக்கிகள் மற்றும் ஒரு தொகை தோட்டாக்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மத்துகம பொலிஸாரால் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேருவளை பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து 13 துப்பாக்கிகள் மற்றும் ஒரு தொகை தோட்டாக்களுடன் குறித்த இருவரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கையின் தேயிலை உற்பத்தி 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

ஆயினும் இந்த ஆண்டு முதல்10 மாதங்களில்தேயிலை உற்பத்தியானது 2 சதவீதத்தால் குறைவடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் 3.9 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி அதிகரித்து, மொத்த உற்பத்தியாக 29.6 மில்லியன் கிலோ பதிவாகி இருந்தது.

இந்த ஆண்டின் முதல் 10 மாதங்களில் 253 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# நீதிமன்ற தீர்ப்புக்காக காத்திருக்கும் அனைத்துலக நிதி நிறுவனங்கள்

## சீனாவும் கைவிரிப்பு

(கொழும்பு)

அரசியல் நெருக்கடிகளால், இலங்கைக்கு கடன் வழங்க இணங்கிய பல அனைத்துலக நிதி நிறுவனங்கள், தமது செயற்பாடுகளை இடைநிறுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய அரசியல் இழுபறிகளால், சட்டரீதியான அரசாங்கம் தொடர்பான கேள்விகள் எழுந்துள்ளன.

இதனால் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகும் வரை, தமது கடன்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதை அனைத்துலக நிதி நிறுவனங்கள், நிறுத்தி வைத்துள்ளன.

இலங்கை அரசாங்கம் எதிர்வரும் ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மாதத்துக்கிடையில், 1.5 பில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்த வேண்டியநிலையில்உள்ளது.

இதில் ஒரு பில்லியன் டொலர் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி செலுத்தப்பட வேண்டும். இதற்காக, சீன அபிவிருத்தி வங்கியிடம் 500 மில்லியன் டொலரை கடனாக பெறுவதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

ஆனால், அரசாங்கத்தின் சட்டபூர்வ தன்மை தொடர்பான இழுபறியால், இந்தக் கடனை சீன அபிவிருத்தி வங்கி நிறுத்தி வைத்துள்ளது. ஏற்கனவே சீன அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை அரசாங்கம் ஒரு பில்லியன் டொலரை கடனாக பெற்றுள்ளது.

சீனாவிடம் கடனைப் பெறுவதற்கு பேச்சு நடத்தினோம், ஆனால் நாங்கள் நீதிமன்ற உத்தரவுகளுக்காக காத்திருக்கிறோம், என்று இலங்கை அதிகாரி ஒருவர் கூறினார்.

"நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை, யாரும் எங்களுக்கு கடன் கொடுக்கப் போவதில்லை. அவர்கள் அரசியல் சூழ்நிலை தெளிவாக உள்ளதா? என்பதை அவர்கள் பார்க்க விரும்புகிறார்கள்.

நாங்கள் உங்களுக்கு கடன் கொடுக்கமாட்டோம் என்று கூறவில்லை. ஆனால் நாங்கள் முதலில் தெளிவுபடுத்த விரும்புகிறோம் என அவர்கள் சொல்கிறார்கள்," என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் நெருக்கடிகளால் அனைத்துலக நாணய நிதியமும், அடுத்த கடன் தவணைக்கான பேச்சுக்களை இடைநிறுத்தி வைத்துள்ளது.

2016இல், அனைத்துலக நாணய நிதியம் இலங்கைக்கு 1.5 பில்லியன் டொலர் கடனை மூன்று ஆண்டுகளில் கட்டம் கட்டமாக வழங்க இணங்கியிருந்தது.

அதில் ஒரு பில்லியன் டொலர் இன்னமும் வழங்கப்படாத நிலையில், தெளிவான அரசாங்கம் அமைக்கப்படும் வரை காத்திருப்பதாக அனைத்துலக நாணய நிதியம் மேலும் அறிவித்துள்ளது. (இ-7)

# போதைப்பொருள் பாவனை,விற்பனையை கட்டுப்படுத்த சட்டத்தை அமுலாக்குங்கள்

## சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள்போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனைக் கட்டுப்பாடுகளுக்கான சட்ட அமுலாக்கத்தினை நடைமுறைப்படுத்துமாறு யாழ். மாவட்ட செயலகத்தினர் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள கோரிக்கை கடிதத்தில்,

யாழில் பல்வேறு தடுப்பு செயற்பாடுகளில் பிரதேச சபைச் சட்டங்கள் உருவாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. சிகரெட், புகையிலை,பீடி உள்ளிட்ட புகையிலை சார் உற்பத்திகளைக் கட்டுப்படுத்த கோப்பாய்,உடுவில் பிரதேச சபைகள் முன்வந்துள்ளன. தங்கள் சபையிலும் சிகரெட், பீடி.புகையிலை சார் உற்பத்திகளை கட்டுப்படுத்தி புதிய பாவனையாளர்கள் உள்வாங்கப்படுவதைத்தடுக்க வேண்டும் புதிய பாவனையாளர்களைத் தடுக்க எமக்கு ஆதரவு வழங்கி உதவுக.

எமது நாட்டில் நாள் ஒன்றிற்கு 72பேர் வீதம் வருடத்திற்கு 26,230பேர் புகைத்தல் மற்றும் புகையிலைப் பாவனைகளால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி மரணிக்கின்றனர்.மேலும் புகையிலைப்பொருள் பாவனையால் ஏற்படும் புற்றுநோய், மாரடைப்பு போன்ற தொற்றா நோய்களால் பாவனையாளர்கள் பாதிக்கப்படும் போது அவரைத் தங்கி வாழும் குடும்பம்அடிப்படைத்தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கிறது.

2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரித்தானிய, அமெரிக்க புகையிலைக் கம்பனியின் கிளை நிறுவனமான இலங்கைப் புகையிலைக் கம்பனி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொண்ட தந்திரோபாய முறையிலான வியாபார முன்னெடுப்புக்கள் காரணமாக சிகரெட் உள்ளிட்ட புகைப்பொருள் பாவனையானது பாரிய அதிகரிப்பினை ஏற்படுத்தி, பொருளாதார, சமூக ரீதியாக பாதிக்கப்பட்ட எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பாரிய சவாலாகவும் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தில் அதிகளவான சனத்தொகையைக் கொண்டுள்ள யாழ். மாவட்டத்தில் புகைப்பொருள் மற்றும் மதுப் பாவனையானது பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளமை யாவரும் அறிந்த விடயமே. அதன் தாக்கம் மேலும் அதிகரித்து தற்போது கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப் பொருட்களையும் பாவனை செய்யும் அளவிற்கு எமது இளைஞர் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது.யாழ் மாவட்டத்தில் அண்மையில் இடம் பெற்ற சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களும் இவ்வாறான போதைப்பொருள் பாவனையாளர்களாலே மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களை பாவிப்பவர்கள் ஆரம்பத்தில் புகையிலை சார் உற்பத்தி பொருட்களையே பாவிப்பதாகவும் அதன் பின்னரே ஏனைய போதைப் பொருள்பாவனைக்கு ஆளாவதாகவும் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு புகைபொருள் பாவனையை ஆரம்பிக்கும் வயது 13 தொடக்கம் 18வயது வரை என ஆய்வுகள் சுட்டிக்காட்டு கின்றன.

ஆகவே பாடசாலை மாணவர்களை இலக்கு வைக்க மேற்குறிப்பிட்ட வியாபாரங்கள் மேற் கொள்ளப்படுகின்றமை வெளிப்படையான உண்மை.

தடுப்பு முறைகள் -தொடர்ச்சியான தடுப்புச் செயற்பாடுகள் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆனால் சிகரட், பீடி, சுருட்டு உட்பட ஏனைய புகையிலை சார் உற்பத்தி பொருட்களின் உற்பத்தி யாளர்கள் பணபலம், அரசியல் பலத்தைக் கொண்டு மேற்கொள்ளும் தந்திரோபாயச் செயற்பாடுகளால் பாவனை மேலும் அதிகரித்துச் செல்கின்றமையை அவதானிக்க முடிகிறது.

எனவே தடுப்புச் செயற்பாடுகளில் ஒன்றாகிய கிடைக்கக்கூடிய வழி முறைகளைக் கட்டுப்படுத்தல் என்ற விடயத்தினை விரைவாகவும், ஆக்கபூர்வமாகவும் செயற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கிடைக்கக் கூடிய தன்மையை கட்டுப்படுத்த வேண்டுமாயின் விற்பனையைத் தடுத்தல் அல்லது குறைத்தல் அவசியம்.

உற்பத்தி நிறுவனங்கள் சிறுவர்களை இலக்கு வைத்து இவ்வாறான வியாபாரங்களை முன்னெடுப்பதனால் சிறுவர்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் இவ் வியாபாரம் முற்றாகத் தடை செய்தல் வேண்டும். தேசிய ரீதியில் இவ்வாறான சட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டு வருவதால் எமது பிரதேசம், எமது பிரதேச மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

எமது மக்களின் பாதுகாப்பு, வாழ்வாதாரம், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் விரைந்து நடவடிக்கை எடுப்பது கடமையாகும். பிரதேச சபையின் சட்ட உருவாக்கத்திற்கான ஆலோசனைகள் - சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், மத தலங்கள், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானங்கள், பேருந்து தரிப்பிடங்கள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் இருந்து 500மீற்றர் தூரத்திற்குள் உள்ள விற்பனை நிலையங்களில் சிகரட்,பீடி, சுருட்டு உட்பட ஏனைய புகையிலை சார் உற்பத்தி மற்றும் இலங்கை அரசினால் போதைப் பொருள் என அடையாளம் காட்டப்பட்ட பொருட்களின் விற்பனையைத்தடை செய்தல்

மேற்குறிப்பிட்ட இடங்களில் புகையிலைப் பொருட்களை விளம்பரப்படுத்தல், வரத்தக நிலைய விலைப் பட்டியலில் இவற்றின் விலைகளைக் காட்சிப்படுத்தலைத் தவிர்த்தல்.

மேற்குறிப்பிட்ட இடங்களில் புகையிலை சார் உற்பத்தி பொருட்களை பாவிப்பதனை தடை செய்தல்.மீறிச் செயற்படும் வர்த்தக நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை இடை நிறுத்தல், தண்டம் அறவிடல், அவர்களிடம் புதிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளாமல் விடுதல்.

மேற்குறித்த சட்டங்களை அமுல்படுத்தல் ,கண்காணித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றவற்றிற்கு அதிகாரம் பெற்ற அதிகாரிகளான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச சபையின் கண்காணிப்பாளர்கள் செயற்பட வேண்டும். சட்டத்தை வலுப்படுத்தல்.புதிய பரிந்துரைகளை முன்வைத்தல்மற்றும் ஆலோசனைகள் வழங்குபவர்களாக பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேச செயலகம்,பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பிரதேச போதைப் பொருள் தடுப்புக்குழு, பொலிஸ் நிலையம், பாடசாலை அதிபர்கள் மற்றும் மதத் தலைவர்கள் காணப்படுவார்கள் என மாவட்ட செயலகம் தனது கோரிக்கை கடிதத்தில் தெரிவித்திருந்தது.

குறித்த கோரிக்கை கடிதம் அண்மையில் இடம் பெற்ற சாவகச்சேரி பிரதேச சபை அமர்வில் வாசிக்கப்பட்டு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் தை மாதம் வர்த்தக நிலையங்களிற்கான அனுமதியை புதுப்பிக்க வர்த்தகர்கள் வரும் போது இது சம்பந்தமான விடயங்கள் உள்ளடங்கிய பத்திரம் வழங்கப்படும் எனவும் அந்த வரையறைக்குள் வர்த்தகர்கள் செயற்படும் பட்சத்தில் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலை சார் உற்பத்திப் பொருட்களை சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் தடுக்க வேண்டும் என கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் சபையில் பிரேரணையை முன்வைத்த போது அதனை சபையில் உள்ள எவரும் ஆதரிக்கவில்லை.

அதே பிரேரணை தற்போது மாவட்ட செயலகத்தால் அனுப்பப்பட்ட போது உடனடியாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

## ஆயிரம் ரூபா சம்பளம் கோரி

# வலுக்கிறது போராட்டம்! வீதியில் ரயர்கள் எரிப்பு







(பொகவந்தலாவ)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தினை வலியுறுத்தி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் மேற்கொள்ளப் பட்டுவரும் ஆர்ப்பாட்டமானது ஆறாவது நாளாக நேற்றைய தினமும் பொகவந்தலாவ லெச்சுமித் தோட்டத்தேயிலைத் தொழிற்சாலைக்கு முன்பாக இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தொழிற்சாலைக்கு முன்பாக ரயர்களை எரித்தும் பெருந்தோட்ட கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் பதாதைகளை ஏந்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கையில்,


"எங்கள் போராட்டத்தை யாரும் இழிவுபடுத்த வேண்டாம்.

நாங்கள் இந்த கொழுந்தைப் பறித்தே எங்கள் பிள்ளைகளின் சாப்பாடு மற்றும் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம். மலையக அரசியல்வாதிகள் எங்கள் போராட்டங்களை கொச்சைப்படுத்தி வருகின்றனர்." என கவலையோடு தெரிவித்தனர். (இ-7)

# பாரதம்

## ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம் புதிய வடிவம் எடுக்கும்

### வைகோ காட்டம்



(தூத்துக்குடி)

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம் புதிய வடிவம் எடுக்கும் என்று வைகோ தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

ஸ்டெர்லைட் வழக்கு தற்போது அரசுக்கு விரோதமாக போய்க்கொண்டு இருப்பதற்கு அ.தி.மு.க. அரசு தான் காரணம். 13 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு எடப்பாடி பழனிச்சாமி அரசு தான் காரணம்.

தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் ஆலையை மூட தீர்ப்பு வரும் என்று தெரியவில்லை. இதனால் போராட்டம் நிற்காது. ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடும் வரை போராட்டம் தொடரும். இந்த போராட்டம் புதிய புதிய வடிவம் எடுக்கும். ஆலை அகற்றப்படும் வரை போராட்டம் நடக்கும். ஆனால் வன்முறை இருக்காது. நாங்கள் வன்முறையில் இறங்க மாட்டோம்.

தமிழகத்தில் 20 சட்டமன்ற தொகுதிகளிலும் பெப்ரவரி மாதம் இடைத்தேர்தல் வரும் என்று சொல்கிறார்கள். ஆனால் அதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இந்த தொகுதிகளுக்கு பாராளுமன்ற தேர்தலுடன் தேர்தல் வர அதிக வாய்ப்பு உள்ளது. தேர்தல் எப்போது வந்தாலும் இந்த 20 தொகுதிகளிலும் யார் போட்டியிடுவது என்று தி.மு.க. தலைமை முடிவு செய்யும் என அவர் தெரிவித்தார். (4-7)

## வான்-லொறி விபத்து 10 பேர் உயிரிழப்பு

(மகாராஷ்டிரா)

மகாராஷ்டிரா- சந்திராபூர் மாவட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரையும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனும்தித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



சந்திராபூர் மாவட்டத்திலிருந்து 14 பயணிகளை ஏற்றி சென்ற வான் மீது எதிரே வந்த லொறி மோதியதிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இதில் 7 பெண்கள், வான் சாரதி, 3 வயது குழந்தை மற்றும் ஒரு ஆண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை விபத்துக்கு காரணமான லொறியின் சாரதி அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் சம்பவம் தொடர்பில் சந்திராபூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## பெற்றோல் விலை உயர்விற்கு எதிர்ப்பு; பிரான்சில் மஞ்சள் உடை போராட்டம்

### பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீச்சு



(பாரீஸ்)

பிரான்சில் பெற்றோல் விலை உயர்விற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் நடைபெற்ற மஞ்சள் சட்டை ஆர்ப்பாட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகள் வீசி தாக்கினர்.

பிரான்ஸ் நாட்டில் பெற்றோல் விலை அண்மைக் காலமாக உயர்த்தப்பட்டு வந்தது. ஒரு லீற்றருக்கு 1.24 யூரோ பணம் முதல் 1.53 யூரோ வரை உயர்ந்துள்ளது. அதாவது கடந்த ஒரு ஆண்டில் 23 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது.

இதை எதிர்த்து கடந்த 3 வாரமாக பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் ஆங்காங்கே வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனால் பிரான்ஸ் நாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு தொடர்ந்து கலவரம் நடந்து வந்தது. எனவே பெற்றோல் விலை உயர்த்தியதை 6 மாதத்திற்கு நிறுத்தி வைக்க முடிவு செய்தது. இதனால் போராட்டம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்த்தனர். ஆனாலும் போராட்டம் தொடர்ந்தது.

மஞ்சள் சட்டை அணிந்து போராட்டக்காரர்கள் இதில் பங்கேற்பதை வழக்கமாக கொண்டு வந்தனர். எனவே இதற்கு மஞ்சள் ஜாக்கெட் போராட்டம் என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

இதனால் பிரான்சில் மிகப் பெரிய கலவரம் ஏற்படலாம் என்ற அச்சம் உருவாகி இருக்கிறது. இதன் காரண மாக பிரான்ஸ் முழுவதும் பல்லாயிரக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தலைநகரம் பாரீசில் மட்டும் 8 ஆயிரம் பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். இவர்களுடன் இராணுவத்தினரும் பாதுகாப்பு பணிக்கு வரவழைக்கப்பட்டு உள்ளனர். ஆங்காங்கே இராணுவ வாகனம் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தலைநகர் பாரீசில் சுமார் 1500க்கு மேற்பட்ட போராட்டக்காரர்கள் நேற்று முன்தினம் ஒன்று திரண்டனர். அவர்கள் அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இதைத்தொடர்ந்து அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் மீது சிலர் தாக்குதல் நடத்தினர். இதனால் அவர்களை அங்கிருந்து கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். போராட்டக்காரர்கள் 127 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதேபோல், பிரான்ஸ் முழுவதும் போராட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

பிரான்சில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்கள் நேற்று முன்தினம் மூடப்பட்டுள்ள நிலையிலும், அங்கு பாதுகாப்பு பணிக்காக பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (4-7)

## இரவு விடுதி...

### 6 பேர் பலி; 1...

(ரோம்)

இத்தாலியில் உள்ள நைட் கிளப்பில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்த சம்பவம் வாடிக்கையாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இத்தாலியில் அட்ரியாட்டிக் கடற்கரை நகரமான அங்கோனா அருகே உள்ள புகழ்பெற்ற ஒரு நைட் கிளப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. ராப் பாடகர் சிபேரா எபஸ்தாவின் கச்சேரியைக் கண்டுகளிப்பதற்காக ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர்.

அப்போது, திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது. முண்டியடித்துக்கொண்டு கூட்டத்தில் இருந்து வெளியேற சிலர் முயற்சித்தனர். இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டு சிலர் கீழே விழுந்தனர். அவர்களை கவனிக்காமல் மற்றவர்களும் எழுந்து அரங்கை விட்டு வெளியேறினர். இதனால் கூட்டத்தில் அடிபட்டும் மிதிபட்டும் பலர் காயமடைந்தனர். நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். 100பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கச்சேரி நடைபெற்றபோது கூட்டத்தில் இருந்த யாரோ ஒரு நபர் திடீரென மிளகு ஸ்பிரேயை தெளித்ததால்

## வங்கிக் கொள்ளை... பிணைக்கைதிகள்...



(ரியோ டி ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் வங்கிக் கொள்ளையர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே நடந்த துப்பாக்கிச்சமரில் பிணைக் கைதிகள் உள்ளிட்ட 12 பேர் உயிரிழந்தனர்.

பிரேசில் நாட்டின் சியரா மாநிலம் மிலாக்ரஸ் நகரின் பிரதான வீதியில் பல்வேறு வங்கிக் கிளைகள் மற்றும் ஏடிஎம் மையங்கள் உள்ளன. நேற்று முன்தினம் அப்பகுதியில் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளைக் கும்பல், வங்கிகளுக்குள் சென்று கொள்ளையடிக்க முயன்றது.

## நிலவின் மறுபக்க ஆ... ரோவரை அனுப்பி...

(பீஜிங்)

நிலவின் மறுபக்கத்தை ஆய்வு செய்து, அங்கு பயிரிடும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில், புதிய லூனார் ரோவரை சீனா அனுப்பி உள்ளது.

நிலவு மற்றும் செவ்வாய் போன்ற பகுதிகளுக்கு மனிதனை அனுப்புவதற்கு முன்னர் அங்கு தாவரங்கள் மற்றும் பிற உயிரினங்களை அனுப்பி அவை எப்படி அங்குள்ள சூழ்நிலைகளை சமாளித்து தாக்குப்பிடிக்கின்றன மற்றும் அவற்றுக்கு எந்தவிதமான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று கண்டறிந்து ஆவணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது சீனாவின் சாங் இ (Chang'e Program) திட்டம். இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக 'சாங் இ 4 மிஷன்' (Chang'e 4 Mission) எனும் திட்டத்தை சீனா செயல்படுத்தி உள்ளது.


இதுவரை பூமியை நோக்கி காணப்படாத நிலவின் மற்றொரு பகுதியாக கருதப்படும் வோன் கர்மான் என்னும் பகுதியில் சாங் இ-4 என்னும் இந்த செயற்கைக்கோள் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவிலுள்ள ஷிசாங் விண்வெளி நிலையத்திலிருந்து லோங் மார்ச் 3பி என்னும் ரொக்கெட்டில் இந்த ரோபோ, நிலவை நோக்கி செலுத்தப்பட்டது.

இந்த முயற்சியின் மூலம் நிலவிலுள்ள பாறைகள், மண் ஆகியவற்றை பூமிக்கு கொண்டு வந்து மேலதிக ஆராய்ச்சிகளை செய்வதற்கு சீனா


# வெளிநாடு

## ...தியில் சன நெரிசல்;
## ...100 பேர் படுகாயம்



பரபரப்பு ஏற்பட்டது. பயந்து போன மக்கள் அவசர அவசரமாக வெளியேறியதால் நெரிசல் ஏற்பட் டிருக்கலாம் என தீய ணைப்புத்துறை தெரிவித் துள்ளது. (4-7)

## அமெரிக்காவின் தடைகள் பொருளாதார பயங்கரவாதம்
### ஈரான் ஜனாதிபதி கடும் தாக்கு



(டெஹ்ரான்)

அமெரிக்கா விதித்துள்ள தடைகள் பொருளாதார பயங் கரவாதம் என்றும். இதனை சகித்துக்கொள்ள முடியாது என்றும் ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஈரானுடன்செய்துகொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தில் இரு ந்து அமெரிக்கா கடந்த மே மாதம் விலகியதுடன், ஈரான் மீது கடுமையான பொருளா தார தடைகளை விதித்தது. இந்த பொருளாதாரத் தடை க்கு ஒத்துழைக்காத நாடுகள் மீது கடும் நடவடிக்கை எடுக் கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்தது.

குறிப்பாக ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் வாங்கு வதை உலக நாடுகள் முற்றி லுமாக குறைக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வலியு றுத்தியது.

இந்நிலையில் ஈரானில் நடைபெற்ற தீவிரவாத எதிர் ப்பு மற்றும் பிராந்திய ஒத்து ழைப்பு மாநாட்டில்ஈரான் ஜனா திபதி ஹசன் ரவுகானி பேசிய தாவது,

கௌரவமான ஈரான் நாட் டின் மீது அமெரிக்கா விதித் துள்ள அநியாயமான மற் றும் சட்டவிரோத பொருளா தார தடைகளானது, எங்கள் நாட்டை இலக்காகக் கொண் டுள்ள பயங்கரவாதம் ஆகும். எங்கள் சுதந்திரம் மற்றும் அடையாளத்திற்கு அச்சுறுத் தல் மட்டுமல்லாமல், நமது நீண்டகால உறவுகளை முறித் துக்கொள்ளும் வகையிலான முழுமையான தாக்குதலை எதிர்கொண்டுள்ளோம்.

சீனாவின் வர்த்தகத்தில் அவர்கள் அழுத்தம் கொடுக் கும் போது, நாம் அனை வரும் பாதிக்கப்படுகிறோம். துருக்கி மீது நடவடிக்கை எடுத்தால் நாம் அனைவரும் பாதிக்கப்படுகிறோம். அவர் கள் ரஷ்யாவை எந்த நேரத் திலும் அச்சுறுத்தலாம். அப் போது நாமும் நமது பாதுகா ப்புக்கு பங்கம் ஏற்பட்டிருப் பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

அவர்கள் ஈரான் மீது தடை கள் விதிக்கும்போது, நம் அனைவருக்குமான சர்வ தேச வர்த்தக பலன்கள், ஆற் றல் பாதுகாப்பு மற்றும் நிலை யான வளர்ச்சியை தடுக்கி றார்கள். உண்மையை சொல் லப்போனால், அவர்கள் ஒவ் வொரு நாட்டின் மீதும் தடை களை விதிக்கிறார்கள். இது போன்றஆணவமானபோக்கை நாம் சகித்துக்கொள்ளக் கூடாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஆப்கா னிஸ்தான், சீனா, பாகிஸ் தான், ரஷ்யா மற்றும் துருக்கி நாடுகளின் பாராளுமன்ற சபாநாயகர்கள் பங்கேற்ற னர். (4-7)

## ...ளையின் போது துப்பாக்கிச்சமர்
## ...ள் உள்ளிட்ட 12 பேர் பலி



ஏடிஎம்மையங்களையும்உடை க்க முயற்சித்துள்ளனர்.

இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்தி ற்கு வந்து, கொள்ளையர்கள் மீது துப்பாக்கிச்சூடுநடத்தினர். கொள்ளையர்களும் பொலி ஸாரைநோக்கி துப்பாக்கியால் சுட்டனர். அத்துடன் அங்கிரு ந்து தப்பிச் செல்லும் முயற்சி யாக, பொது மக்கள் சிலரை பிணைக் கைதிகளாக பிடித் தனர்.

பின்னர் பொலிஸாரின் தாக்குதல் தீவிரமடைந்த தால் பிணைக் கைதிகளை கொள்ளையர்கள் சுட்டுக் கொன்று விட்டு தப்பி ஓடினர். அவர்களை சுற்றி வளைத்து பொலிஸார் துப்பாக்கியால் சுட்டனர். சுமார் 20 நிமிட ங்கள் வரை நீடித்த இந்த சண்டையில் 6 பிணைக் கைதிகள் உள்ளிட்ட 12 பேர் உயிரிழந்தனர். 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையர்கள் விட் டுச் சென்ற ஆயுதங்கள் மற் றும் வாகனங்கள் கைப்பற்ற ப்பட்டுள்ளன. சில கொள் ளையர்கள் தப்பிச் சென்று விட்டனர். அவர்களை பொலி ஸார் தீவிரமாகத் தேடி வரு கின்றனர். (4-7)

## 68 ஆவது உலக அழகியாக மெக்சிகோவின் வனேசா தெரிவு



(மெக்சிகோ)

68 ஆவது உலக அழகி யாக மெக்சிகோவின் வனேசா போன்ஸ் டி லியோன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


சீனாவின் சான்யா நக ரில் 68 ஆவது உலக அழகி பட்டத்திற்கான போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், மெக்சிகோ நாட்டை சேர்ந்த வனேசா போன்ஸ் டி லியோன் 2018 ஆம் ஆண் டின் உலக அழகி பட்டத்தை வென்றுள்ளார்.

கடந்தாண்டு உலக அழகி பட்டத்தை வென்ற இந்தியாவை சேர்ந்த மனுஷி சில்லர் வனேசாவு க்கு உலக அழகி கீரீடத்தை சூட்டினார்.

வனேசா சர்வதேச வணி கத்தில் பட்டப்படிப்பு படித்து தற் போது மொடலாகவும் நிகழ் ச்சி தொகுப்பாளராகவும் செய ற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...ஆய்விற்காக
## ...ப்பிய சீனா



திட்டமிட்டுள்ளது.

ஜனவரி மாதத்தின் தொடக்க பகுதி வரை இந்த செயற்கைக் கோள் நிலவில் தரையிற ங்காது.

ஆனால், குறிப்பிட்ட காலம் முடிவு செய்யப்பட்ட பிறகு செயற்கைக் கோள் நிலவின் வேறொரு மூலையிலுள்ள கரடுமுரடான பகுதியில் தரை யிறங்கும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

பல பில்லியன் ஆண்டு களுக்கு முன்னர் சூரிய னின் குறுங்கோள்களில் ஒன்று நிலவில் தெற்கு அரைக் கோளத்திலுள்ள அய்ட்கன் பேசினில் மோதியதால் அங்கு பெரும் பள்ளம் உண்டா னது.

எனவே, நிலவு குறித்த ஆராய்ச்சிகள் தொடங்கிய காலத்திலிருந்தே வோன் கர்மான் என்னும் இந்த இடத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு பல்வேறு நாடுகளின் விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டி வருகிறார் கள்.

தற்போது சீனாவினால் ஏவப்பட்டுள்ள செயற்கைக் கோள் இதுவரை ஆராய்ச் சிகளே மேற்கொள்ளப்படாத நிலவின் தென் துருவப் பகு தியின் புவியியல் அமைப்பு குறித்த தகவல்களை சேமிப் பதோடு அங்கிருந்து பாறை துண்டுகள், மண் மாதிரி களை பூமிக்கு கொண்டு வரும்.

**Tidal locking** அல்லது ஓதப் பூட்டல் என்ற விளை வின் காரணமாக நம்மால் நிலவின் ஒரு பகுதியை மட் டுமே பார்க்க முடிகிறது. ஏனெ னில், நிலவை சுற்றி வருவ தற்கு எடுத்துக் கொள்ளும் அதே காலத்தை தன்னைத் தானே சுற்றி வருவதற்கும் நிலவு எடுத்துக் கொள்கி றது.

பொதுவாக நிலவின் "இரு ண்ட பக்கம்" என்றழைக்கப் படும் இந்த இடத்திலும் சூரிய வெளிச்சம் காணப்பட்டா லும், பூமியிலிருந்து இந்த இடத்தை பார்க்க முடியாது என்பதால்தான் இதை அவ் வாறு அழைக்கின்றனர்.

பூமியின் தொலைதூரத் தில் ரேடியோ அலைகளை அடிப்படையாக கொண்ட தொலைநோக்கிகளை நில வின் தென்துருவத்தில் அமைப் பதற்கான பூர்வாங்க பணிக ளையும் இந்த செயற்கைக் கோள் மேற்கொள்ளும்.

அதுமட்டுமன்றி, நில வில் உயிரியல் பரிசோத னைகளை மேற்கொள்வதற் காக ஒரு பெட்டிக்குள் உரு ளைக்கிழங்கு, அராபிடா ப்சிஸ் தாவரத்தின் விதை கள் மற்றும் பட்டுப்பூச்சி முட்டைகள் மூன்று கிலோ கொண்ட கொள்கலனில் கொண்டு செல்லப்பட்டுள் ளன.

நிலவை அடையும் பட்டு ப்பூச்சி முட்டைகள் முதலில் பட்டுப்பூச்சிகளை உற்பத்தி செய்யும், பின்னர் அந்த பட் டுப்பூச்சிகள் நிலவில் கரிய மில வாயுவை உற்பத்தி செய்யும்.

இதற்கிடையில், உரு ளைக்கிழங்கு மற்றும் அராபிடாப்சிஸ் செடிகள் வளர்ந்து ஒளிச்சேர்க்கை மூலம் ஒட்சிசனை உற்பத்தி செய்யும். இவை அனை த்தும் ஒன்று சேர்ந்து நில வில் ஒரு சிறிய சூழ்மண் டலத்தை (**simple eco-system**) உருவாக்கும் என் கிறார் ஆய்வாளர் யுவான் சுன்.

"லூனார் மினி பயோஸ் பியர்" என்று பெயரிடப்பட் டுள்ள இந்த உபகரணத்தை 28 சீன பல்கலைக்கழகங் கள் இணைந்து உருவாக் கியுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. (4-7)

# மகிந்த, மைத்திரிக்கு எதிராக மேற்குலக நாடுகளின் தூதுவர்கள்

## கோத்தபாய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மொரட்டுவையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியே புதிய பிரதமரையும், அரசையும் நியமித்தார்.

அதற்கு எதிராக மேற்குல நாடுகளின் தூதுவர்கள் செயற்படுகின்றனர். தமக்கு தேவையான ஜனாதிபதி, பிரதமரை நியமிக்கவே அவர்கள் முற்படுகின்றனர்.

2014 ஆம் ஆண்டு தலை தூக்கிய சக்திகள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன. அன்றுபோல் இன்றும் போலிப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்ட போது அதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக வாசித்தார்களா? தெரியவில்லை. அவ்வாறு வாசித்திருந்தால் அப்



படியானதொரு சட்டமூலத்துக்கு அனுமதி வழங்கியிருக்கமாட்டார்கள்" எனத் தெரிவித்துள்ளார். (4-7)

# தோட்டத்தொழிலாளர்களின் போராட்டத்திற்கு நாம் ஆதரவு வழங்கத் தயார் - திகாம்பரம்

(கொழும்பு)

1000 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்ற நிபந்தனையுடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்த போராட்டத்திற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் அரசாங்கமே இல்லாத போது ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுப்பது அர்த்தமற்றதாகும்.


இதனாலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் முன்னெடுக்கப்படும் வேலைநிறுத்த போராட்டத்திற்கு நாம் ஆதரவளிக்கவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்ததைப் போன்று அவரால் 1000 ரூபா அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆதரவளிக்காமையே இதற்கான காரணம் என எம்மைக் குறை



கூற முற்படுவார்" என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

# கொழும்பில் கோர விபத்து; மூன்று பேர் உயிரிழப்பு!



(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான கல்கிஸ்ஸைப் பகுதியில் ஏற்பட்ட கோர விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

கல்கிஸ்ஸ நீதிமன்றத்திற்கும் இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் அருகில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வேளையில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. விபத்தில் காயமடைந்த 8 பேர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து காலி நோக்கி பயணித்த மோட்டார் வாகனம் ஒன்று, மற்றுமொரு மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள் இரண்டின் மீதும் மோதியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதியும் மற்றொரு நபரும் உயிரிழந்துள்ளனர். மோட்டார் வாகன சாரதி குடிபோதையில் இருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கல்கிஸ்ஸை நீதிமன்றத்திற்கு அருகில் குறித்த சாரதி மேலும் இரண்டு நபர்கள் மீது மோதியுள்ளார். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின் பின்னர் குறித்த சாரதி குறித்த மோட்டார் வாகனத்திலேயே தப்பிச் சென்றுள்ளார். குறித்த சாரதி ஓட்டிய மோட்டார் வாகனம் இரத்மலானை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இன்னுமொரு மோட்டார் வாகனத்தின் மீதும் 2 மோட்டார் சைக்கிள் மீதும் மோதியுள்ளது. இந்த விபத்தை ஏற்படுத்தி மோட்டார் வாகனத்தின் சாரதியும் படுகாயம் அடைந்த நிலையில், பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (4-7)

# கண்காணிப்புப் பணியின் கீழ் பொதுச்சேவை நியமனங்கள்

## ஜனாதிபதி ஆலோசகர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுச் சேவைக்கு அதிகாரிகளை நியமனம் செய்ய முடியும். ஆனால் அரசியல் நெருக்கடிக் காலத்தில் வழங்கப்படும் புதிய நியமனங்கள் அனைத்தும் சந்தேகத்திற்குரியதாகக் கருதப்படும் என ஜனாதிபதி ஆலோசகர் ஜே.சி.வெலியமுன தெரிவித்துள்ளார். பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் பொது அதிகாரிகள் நிர்வகிக்கப்படுவதாகவும் எனவே பொதுச்சேவை ஆணைக்குழுவின் உயரிய கண்காணிப்பின் கீழ் அனைத்து நியமங்களும் மேற்கொள்ளப்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் ரீதியாக திட்டமிடப்பட்ட நியமனங்கள் அனுமதியில்லை. ஆனால் பொதுச்சேவை ஆணைக்குழுவின் கீழ் வரும் நியமனங்கள் செய்யப்படலாம்.

மேலும் அமைச்சின் செயலாளர்களுக்கு பொதுச் சேவைக்கு நியமனம் செய்ய அதிகாரங்கள் கொண்டிருக்கின்றன. அத்தோடு அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் சில அதிகாரங்களை அமைச்சின் செயலாளர்களுக்கும் துறைசார் தலைவர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய பிரதிநிதித்துவ அதிகாரங்களை அமைச்சகச் செயலர்களால் நியமனம் செய்யும் திட்டத்தின் படி நீண்டகால நியமனம் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு தற்போதைய அரசியல் சூழலில் நியமனம் செய்வது என்பது இந்த நியமனங்கள் மீதான தொடர்ந்தும் சந்தேகத்தை ஏற்படுத்



தும் என்றும் சட்ட சவால்களுக்கும் இது உட்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு நியமித்தல் வரவிருக்கும் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டமின்றி, புதிய நியமனங்களைச் சம்பள மற்றும் ஊதிய வரம்புகளை வழங்குவது சிக்கலானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ரீ குடிக்கலாமா?

"வாங்க சேர்... ஒரு ரீ குடித்துவிட்டுப் போகலாம்?" யாரைப் பார்த்தாலும் இப்படி சகஜமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஒருத்தரை உபசரிக்க வேண்டும் என்று நினைத்தால் உடனடியாக நாங்கள் செய்வது ரீ குடிக்கச் சொல்வது தான்.

இதனால் ரீ வேண்டாம் என்று நினைப்பவர்கள் கூட ஒரு கட்டாயத்துக்காக அதைச் சாப்பிட வேண்டியிருக்கிறது! ரீ அதிகமாக குடிப்பது கெடுதல்தான். அதனால் அதை ஒரு அளவோடு நிறுத்துவது தான் நல்லது.

நாங்கள் குடிக்கும் ரீயில் காஃபீன் என்னும் நச்சுப் பொருள் இருக்கிறது. இது ஒரு ஐந்து நிமிடத்தில் உடம்பு பூராகவும் பரவிவிடும். ஒரு நாளில் 300 தொடக்கம் 350 மில்லிகிராம் காஃபீன் எங்களது உடம்புக்குள்ளே போய்விட்டது என்றால்... அது எங்களை ரீ பழக்கத்துக்கு அடிமையாக்கக் கூடிய அளவு என்று அர்த்தம்.

நமக்குத் தெரியாமலேயே ரீ பழக்கத்துக்கு நாம் அடிமை ஆகியிருப்போம். அதை எப்படிக் கண்டு பிடிக்கிறது தெரியுமா? ஒரு இரண்டு மூன்று நாள் ரீ சாப்பிடுவதை நிறுத்துங்கள். என்ன ஆகின்றது பாருங்கள். அந்தச் சமயத்தில் உங்களுக்கு அடிக்கடி எரிச்சல் வருகிறதா?, கொட்டாவி வருகிறதா?, தூக்கம், மயக்கம் இருக்கிறதா?, தலைவலி வருகிறதா?, அடிக்கடி உணர்ச்சிவசப்படுகிறீர்களா?, கோபத்தை அடக்க முடியவில்லையா?

அப்படி என்றால் அநேகமாக நீங்கள் ரீக்கு அடிமையாகியிருப்பீர்கள்! ஒரு நாளைக்கு மூன்று முதல் நான்கு குவளை ரீ குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் காஃபீனுக்கு (Coffeinisom) என்னும் கோளாறுக்கு ஆளாகக் கூடும். அது எப்படிப்பட்ட கோளாறு என்றால்... மனதில் ஒரு ஏக்கம் இருக்கும். அமைதி இருக்காது, இரவில் சரியாகத் தூங்க முடியாது, ரொம்பவும் நேரம் கழித்து தூக்கம் வரும் அல்லது தூக்கம் கெட்டுப் போய்விடும்.

உங்களுக்குத் தூங்குவதில் சிரமம் இருக்கிறதா? தலைவலியோ உடல் நடுக்கமோ இருக்கிறதா? அப்படி என்றால் ரீயைக் குடிப்பது நல்லது. கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டே வந்துவிடலாம். தலை வலிக்கிறது ரீ குடித்தால் நல்லது என்று சொல்கின்றோம் அல்லவா...

தலை வலித்தால் ரீ குடிப்பதற்குப் பதிலாக அதை நிறுத்துவது நல்லது. ரீ குடிக்கும் பழக்கம் அடிக்கடி தலைவலி வருவதற்குக் காரணம் என்று சில ஆராய்ச்சி முடிவுகள் சொல்கின்றன. வயிற்றுப்புண் உள்ளவர்கள் ரீயை நிறுத்துவதுதான் நல்லது.

ஒரு சில நடத்தைக் கோளாறுகளுக்கும் அளவுக்கு மீறிய செயற்பாடுகளுக்கும் காஃபீன் காரணமாக இருக்கும் என்று சில பேர் சொல்கிறார்கள். இருந்தாலும் அது இன்னும் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை!

கருவுற்ற பெண்கள் அதிகமாக ரீ குடித்திருந்தால் கருச்சிதைவு, உதடு பிளந்த குழந்தைகள் உருவாகின்றது. கை ஊனத்தோடு உருவாகின்றது. இது மாதிரி சில பிறவிக் கோளாறுகள் ஏற்படலாம். அதற்காக ரீ அதிகமாக குடித்தால் கண்டிப்பாக இப்படி ஆகிவிடும் யாரும் பயப்பட வேண்டாம். இப்படி ஆவதற்கு என்று சான்ஸ் உண்டு என்று சொல்வார்கள்... அவ்வளவுதான்.

வழக்கம் போல் எலிகளை வைத்துச் சில ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்துவிட்டு இப்படி சொல்கிறார்கள்... அந்த ஆராய்ச்சி எப்படி என்றால்... சில எலிகளுக்குத் தினமும் ரீ கொடுத்தார்கள்... ரீ என்றால் நாம் சாப்பிடும் ரீயையே கொடுத்து குடிக்கச் சொல்வது இல்லை...!

நாம் சாப்பிடும் 18 குவளை ரீயிலே எவ்வளவு காஃபீன்இருக்குமோ அவ்வளவு காஃபீனை தினமும் எலிக்குக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். கடைசியில் அது எல்லாம் ஊனமுற்ற குட்டிகளாக போட்டுதாம்.

அதனால் தேவைக்கு அதிகமாக அல்லது அநாவசியமாக குடிக்கும் ரீயைக் குறைத்துக்கொள்ளலாமே! அது நல்லது தானே! அதற்காகத்தான் இந்தத் தகவல்.

என்னுடன் வேலை பார்க்கும் ஒருத்தர் மாலை ஐந்து மணி ஆனால் போதும்... அவசரமாக வீட்டுக்குப் புறப்படுவார். "ஏன் இவ்வளவு அவசரம்?" என்பேன். "என் மனைவி எனக்காக ரீ குடிக்காமல் காத்துக்கொண்டிருப்பார் சேர்!" என்பார். "உங்கள் மேல் அவ்வளவு மரியாதையா?" என்பேன். "அப்படியில்லை சேர்... நான் போய்த்தான் ரீ போட்டு அவளுக்கும் கொடுத்துவிட்டு நானும் சாப்பிட வேண்டும்!" என்பார்.


# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்



05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

(உதாரணம் வாகன இலக்கம் "Q12"). ஆங்கில எழுத்து Q வில் தொடங்கியதற்கு காரணம் பிரித்தானிய இராணி - Queen ன் முதல் எழுத்தான "Q"வை அடிப்படையாகக் கொண்டு இலக்கமிடப் பட்டது. அதன் பின்னர் இலக்க



1990களில் கொடிகாமம்-பருத்தித்துறை தட்டிவான் தனியார் சேவை

மிடும் முறை மாற்றப்பட்டு ஆரம்ப இலக்கம் ஆங்கில எழுத்து Aல் தொடங்கி Z வரை பயன்படுத்தப்பட்டது. (உதாரணம் வாகன இலக்கம் "A124"). இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் இலக்கமிடும் முறையில் மாற்ற மேற்பட்டது. ஆரம்ப இலக்கம் இரண்டு ஆங்கில எழுத்துக்களுடன் தொடங்கி இலக்கமிடப்பட்டது.

உதாரணம் வாகன இலக்கம் CN 3276. இவ் விரு ஆங்கில எழுத்துக்களும் "CEYLON" என்ற சொல்லில் இருந்து எடுக்கப்பட்டவையாகும். இவ்வாறு "CEYLON" என்ற சொல்லிலிருந்து CE, CY, CL, CN, EY, EL மற்றும் EN என்று தொடங்கும் எழுத்துக்களிலிருந்து வாகன இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டன.

1956 இல் தனிச் சிங்களச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின் இலங்கை சுதந்திர கட்சி தலைமையிலான அரசின் போக்குவரத்து அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க வாகன எண் தகடுகளில் ஆங்கில எழுத்துக்கு பதிலாக சிங்கள ஸ்ரீ (ශ්‍රී) எழுத்து பாவிக்கப்படல் வேண்டும் எனப் பணித்தார். (CEYLON என்ற சொல்லிலிருந்து எழுத்துக்கள் எடுக்கப்பட்டது போல ஸ்ரீலங்கா (ශ්‍රී ලංකා) என்ற சிங்களச்சொல்லிலிருந்து சிங்கள ஸ்ரீ எழுத்து எடுக்கப்பட்டது.) அதன் அடிப்படையில் 1ශ්‍රී. 2 ශ්‍රී. 32ශ්‍රී என இலக்கமிடப்பட்டது. உதாரணம் வாகன இலக்கம் 7ශ්‍රී 2345, 32ශ්‍රී 3446. சிங்கள ஸ்ரீ அமுல்படுத்தப்பட்டதோடு இலங்கையின் வடக்கு- கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையில் சிறி-எதிர்ப்பு போராட்டம் வெடித்து இனக் கலவரம் எல்லாம் நடந்தது. இதுபற்றி பின்னர் பார்ப்போம். 1993ஆம் ஆண்டு எவ்வித போராட்டமும் இல்லாமலே சிங்கள ஸ்ரீ இலக்கத் தகட்டில் இருந்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக சிறுகோடு(-) பாவிக்கப்பட்டது. உதாரணம் வாகன இலக்கம் 19-5463, 300-1234.

2000 ஆம் ஆண்டில் ஆரம்ப இலக்கம் இரண்டு ஆங்கில எழுத்துக்களுடன் தொடங்கி அதனைத் தொடர்ந்து சிறுகோடு (-) பாவிக்கப்பட்டு இலக்கமிடப் பட்டது. உதாரணம் வாகன இலக்கம் KL-3248. பின்னர் இவ்விலக்கத்துடன் பெற்றோல் வாகனத்திற்கு "P" எழுத்தும் டீசல் வாகனத்திற்கு "D" எழுத்தும் அதனுடன் பதியப்பட்ட மாகாணத்திற்காண ஆங்கில எழுத்துக்களும் (உதாரணம் வடக்கு மாகாணத்திற்கு NP) சேர்க்கப் பட்டன. புதிதாக பதியப்படும் வாகனங்களுக்கு G என்ற எழுத்திலிருந்தும் பழைய இலக்கத்திற்குப் பதிலாக புது இலக்கம் கொடுக்கப்படும் போது அவ் விலக்கம் A என்ற எழுத்திலிருந்தும் ஆரம்பித்தன.

2012 ஜூலையிலிருந்து ஆரம்ப இலக்கம் மூன்று ஆங்கில எழுத்துக்களுடன் தொடங்கி சிறு இடைவெளியுடன், சிறுகோடு(-) இல்லாமல் இலக்கமிடப்படுகின்றன. உதாரணம் வாகன இலக்கம் CAP 7180. அத்துடன் பதியப்பட்ட மாகாணத்திற்கான ஆங்கில எழுத்துக்களும் (உதாரணம் கிழக்கு மாகாணத்திற்கு EP) சேர்க்கப்படுகின்றன.

இம் முறையிலும் தொடக்க ஆங்கில எழுத்து வெவ்வேறு வகையான வாகனங்களுக்கு வெவ்வேறு விதமாக உள்ளன. உதாரணம் ஓட்டோ வாகன இலக்கம் AAA என்று தொடங்கியது. இப்போதைய இலக்கத் தகட்டில் சிங்கள எழுத்தோ தமிழ் எழுத்தோ இல்லை.

## வாகன இலக்க தகட்டில் சிங்கள ஸ்ரீக்கு எதிரான போராட்டம்

1957 இல் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் போக்குவரத்து அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க வாகன எண் தகடுகளில் அதுவரை பாவனையிலிருந்த ஆங்கில எழுத்துக்கு பதிலாக சிங்கள ஸ்ரீ (ශ්‍රී) எழுத்து பாவிக்கப்படல் வேண்டுமெனப் பணித்தார். இதனால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது. சிங்கள "ஸ்ரீ"க்கு எதிரான போராட்டத்தை முதலில் ஆரம்பித்தவர் பா.உ.




பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க ஊழியர் சேமலாப நிதியத்தை ஸ்தாபித்தல் 1.6.1958

சி. சுந்தரலிங்கமாவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, சிங்கள "சிறி' க்குப் பதிலாக 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தின் கொள்கையின் பிரகாரம் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் சிறி(ஸ்ரீ)யைப் பயன்படுத்த சட்டத்தில் இடம்தர வேண்டும்என்று வேண்டுகோள் விடுத்தது. இந்த வேண்டுகோள் பண்டாரநாயக்கவினால் நிராகரிக்கப்பட்டது. இவ்வாறு தமிழ்க்கட்சிகள் கூட்டாக அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த போதும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. எனவே தமிழ் கட்சிகள் கூட்டாக மோட்டார் இலக்கத் தகடுகள் பற்றிய சட்டத்தை மீறி, ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதென்றும் அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தின் ஓர் அங்கமாக, இவ்வியக்கத்தை நடத்துவதென்றும் தீர்மானித்தன.

யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி சிங்கள "ஸ்ரீ" எதிர்ப்புச் சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. "சிறியை எதிர்ப்போம் சிறையை நிறைப்போம்", "நண்டெழுத்து வேண்டாம் நமக்கு", "எமது ஆர்ப்பாட்டம் சிங்கள சிறிக்கு எதிரானதல்ல.

சிங்கள "ஸ்ரீ" தமிழ் மக்களுக்கு வேண்டாம். அதை தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்க வேண்டாம்" போன்ற முழக்கங்களோடு சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இயக்கத்தில் அகில இலங்கை காங்கிரஸ் தலைவரும் உறுப்பினர்கள் பலரும் சேர்ந்தனர்.

ஆயினும் அதன் பின் தொடர்ந்த இயக்கத்தில் ஏனையோர் ஈடுபடாது கைவிட, தமிழ் அரசுக் கட்சி மாத்திரமே தொடர்ந்து இயக்கத்தை நடத்தவேண்டிய



தி.பி. இலங்கரட்ன



மைத்திரிபால சேனநாயக்க

நிலை ஏற்பட்டது. முதற்கட்டமாக ஒருநாள் சட்ட மறுப்பாக ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாகத் தமிழ் எழுத்துக்களை இலக்கத் தகடுகளிற் பொறித்து. மோட்டார் வண்டிகளைச் செலுத்திய தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள், இரண்டாவது கட்டமாக நிரந்தரமாகவே தமிழ் எழுத்துக்களோடு மோட்டார்வண்டிகளைச் செலுத்தினர். மூன்றாவது கட்டமாக தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் வீதிகளில் செல்லும் எல்லா மோட்டார் வண்டிகளுக்கும் தமிழ் எழுத்துக்கள் பொறித்த தகடுகளை மாட்டிவிட்டனர்.

அந்நிய மொழி ஆதிக்க வெளிப்பாடாக இலக்கத் தகடுகளிலிருந்த ශ්‍රී, CE, CY, CN,CL, EL,EN முதலிய அனைத்தும் தமிழாக மாற்றப்பட்டன. தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்களுக்குச் சொந்தமான வாகனங்கள் எதிலும் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வியக்கத்திற்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது நிலைமையைக் கவனித்துக்கொண்டிருந்தது கவனிக்கத் தக்கதாகும்.

இப்போராட்டத்துக்கு மத்திய மலை நாட்டில் இந்திய வம்சாவளியினர் வாழும் பகுதிகளிலும் ஆதரவு கிடைத்தது. இதனால் அப்பகுதிகளில் சிங்கள-தமிழ் கலவரம் மூண்டது. இதன் போது பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க தொண்டமான் மத்திய மலைநாட்டின் நகரங்களுக்குச் சென்று நிலைமையை சீர் செய்தார்.

பின்னர் வெளியிட்ட ஊடக குறிப்பில் மலையக தமிழ் இளைஞர்கள் அமைதிகாக்க வேண்டுமெனவும், வடக்கு, கிழக்கு தமிழர் பிரச்சினையிலிருந்து மலையக தமிழரது பிரச்சினை வேறுப்பட்டது எனவும் சுட்டிக்காட்டினார். (தொடரும்)

# இலங்கையின் அரசியல் நிலவரம் குறித்து இந்தியா - அமெரிக்கா உயர்மட்டப் பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் இந்தியாவும், அமெரிக்காவும் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அண்மையில் அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, அவர் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஜேம்ஸ் மாட்டிஸ் உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புகளின் போது, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையின் அண்மைய நிலவரங்கள் குறித்து இந்தச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

## ஊடகங்களை புறக்கணித்த சந்திரிகா



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஊடகங்களை புறக்கணித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட நிகழ்வு ஒன்றில் அவர் கலந்து கொண்டிருந்தார்.

அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் சமகால அரசியல் நிலைமை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இதன் போது ஊடக நிறுவனங்களின் பெயர்களைக் கேட்க, சந்திரிகா இந்த ஊடகங்கள் ராஜபக்ஷ தரப்பின் ஊடகங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கேள்வி எழுப்பிய போது கருத்துக்கூற மறுப்பு தெரிவித்து விட்டு அவர் அவ்விடத்தை விட்டு சென்றுள்ளார். (இ-4-7)

## நிபந்தனைகளின்றியே ஐ.தே.கவுக்கு ஆதரவு என்கிறார் இராதாகிருஷ்ணன்



(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் குறித்தும் தற்போது எம்மால் நிபந்தனைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடிகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டதன் பின்னர் ஐ.தே.க ஆட்சி அமைக்குமானால் இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்துவோம் எனவும் தெரிவித்தார்.

மேலும் நிபந்தனைகள் எதுவும் இன்றியே தமிழ் முற்போக்கு கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்துள்ளது. ஐ.தே.கவிற்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து வரும் கட்சி என்ற ரீதியில் நிபந்தனைகள் மூலம் ஆதரவளிக்க வேண்டிய தேவை எமக்கில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கைச் சின்னம் தேவையில்லை மலர் மொட்டுக்கு ஆதரவுள்ளது

### பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இணைந்து போட்டியிடுவதற்கு பொதுச் சின்னமொன்று அவசியமற்றது எனவும், மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதே பொருத்தமானது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றுக்கு எதிராக அணிசேரும் சகல கட்சிகளையும் இணைத்துக் கொண்டு மலர் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதே சிறந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து கொள்ள வேண்டும்.

இரண்டும் இணைவதற்கான ஒரு பொதுச் சின்னம் அவசியமற்றது. பொதுஜன பெரமுனவுக்கு மக்களிடம் செல்வாக்கு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைவது வெளியாகும் தகவல்கள் தொடர்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிட மேர்வின் விருப்பம்



(கொழும்பு)

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட விரும்புவதாக மக்கள் சேவைக் கட்சியின் தலைவர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.


நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கொழும்புஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போதுகருத்து வெளியிட்டுள்ள அவர், "ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர். தூரநோக்குடன் செயற்படும் அரசியல்வாதி.

எனவே, அவர் தலைமையில் செயற்படுவதற்கு விரும்புகின்றேன்.

ஐக்கிய தேசியக்கட்சி வாய்ப்பளிக்குமானால் அடுத்த பொதுத் தேர்தலில் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடுவதற்குத் தயாராகவே இருக்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாராளுமன்ற அசம்பாவிதம் குறித்து ஆராய விசாரணைக்குழு புதன்கிழமை கூடுகிறது



(கொழும்பு)

பாராளுமன்றத்துக்குள் அண்மையில்இடம்பெற்றஅசாதாரண நடத்தைகள் தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்டுள்ள குழு நாளைமறுதினம் புதன்கிழமை முதல் தடவையாக கூடுவதற்கு தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த அசம்பாவித நிகழ்வுகளால் பாராளுமன்றச் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் அடங்கிய அறிக்கையும் அன்றைய தினம் அக்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில், சமல் ராஜபக்ஷ, சந்திரசிறி கஜதீர, ரஞ்சித் மத்தும பண்டார, பிமல் ரத்நாயக்க மற்றும் மாவை சேனாதிராசா ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மீண்டுமொரு யுத்த சூழல் ஏற்பட இடமளிக்கக்கூடாது

(கல்குடா)

மீண்டுமொரு யுத்த சூழல் ஏற்பட்டு விதவைகளின் எண்ணிக்கை அதிகரிக்க இடமளிக்கக் கூடாது என கல்குடா தொகுதி அமைப்பாளர் டி.எம்.சந்திரபால தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொலை செயயப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சித்தாண்டி முச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகம் காணப்படுகிறார்கள். அதிகமான விதவைகள் உள்ளார்கள்.

தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூன்று சமூகங்களும் இணைந்து பொலிஸாருக்கு உதவி செய்ய வேண்டும்.

சில தீய சக்திகள் தமது தேவைகளுக்காக மீண்டும் யுத்த சூழலை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறார்கள்.

அதனை எமது மக்கள் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## பிரச்சினையைத் தீர்க்க ஆன்மீக நடவடிக்கையும் ஒரு வழிமுறையாகும்-கர்தினால் மல்கம் ரஞ்சித்



(கொழும்பு)

எந்தவொரு பிரச்சினையையும் சமாதானமாக தீர்த்து வைப்பதற்கு ஆன்மீக ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். இலங்கையிலுள்ள பாலஸ்தீன் தூதரகத்தில் இடம்பெற்ற நத்தார் தின வைபவத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆன்மீக நடவடிக்கைகளின் ஊடாக நாட்டில் சமாதானமும் சகவாழ்வும் ஏற்படும் எனவும் கர்தினால் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




> “மட்டக்களப்பு, திருகோணமலை, வன் னிப் பிரதேசங்களிலிருந்து வெட்டப்பட்ட நல்ல தரமான கருங்காலி, முதிரை மரங்களை பற்றே வியா, நெதர்லாந்து நாடுகளுக்கு டச்சுக்காரர் அனுப்பியிருக்கின்றனர். 1669களில் வான் கோன்ஸ் 100 குடும்பங்களை இந்தியாவிலிருந்து கொண்டு வந்து மேற்படி மரங்கள் வெட்டும் வேலையில் ஈடுபட வைத்துள்ளார்”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இதன் விளைவாக இந்தியாவிலிருந்து குறிப்பாக வங்காளம், தென்னிந்தியா போன்ற இடங்களிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் அரைவாசிக்கும் மேலான அரிசி யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்டது.

வன்னிப் பிரதேசத்தில் நல்ல செழிப்பான பிரதேசங்களில் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் யாழ்ப்பாண மன்னர் ஆட்சிக்குப் பின் நீர்ப்பாசனக் குளங்கள் பாழடைந்து போனதால் இப்பிரதேசத்து மக்கள் வானத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வானம் அடிக்கடி பொய்த்ததால் நெல் உற்பத்தி பொதுவாகப் பாதிக்கப்பட்டது. மன்னாரிலும் இதே நிலைமை தான் காணப்பட்டது. ஆனால் கட்டுக்கரைக்குளம் டச்சுக்காரரினால் ஓரளவு திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாக மன்னார் நெல் உற்பத்தியில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது.

திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களில் நல்ல செழிப்பான வயல் நிலங்கள் நெல் உற்பத்திக்கு உகந்த இடங்களாக இருந்தன. மட்டக்களப்பில் ஆகக் கூடுதலான நெல் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் அவ் உற்பத்தி கிழக்குப் பிரதேச மக்களினதும் தென்பகுதி மக்களினதும் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கே இருந்திருக்கின்றது.

மேலும் டச்சுக்காரர் தமக்குத் தேவைய்ான அரிசியையும் மட்டக்களப்பிலிருந்து திறையாகப் பெற்றனர். 1682 இல் மேற்படி இரு பிரதேசங்களிலும் 15830 பறை நெல் அறுவடை செய்யப்பட்டது. அதில் 4500 பறை நெல்லை டச்சுக்காரர் திறையாகப் பெற்று கொழும்புக்கு ஏற்றியிருக்கின்றார்கள்.

வன்னிப் பிரதேசங்கள் போல் திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களும் மழை இன்மையால் அடிக்கடி வரட்சிக்குள்ளாவதால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டன. இவை தவிர டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் வியாபாரம் செழிப்படைந்து காணப்பட்டதால் உள்ளூர் தமிழ் விவசாயிகளும் முஸ்லிம் விவசாயிகளும் நெல் உற்பத்தியைக் கைவிட்டு வியாபாரத்தில் நாட்டம் கொண்டனர். இதன் விளைவாகவும் நெல் உற்பத்தி மேற்படி பிரதேசங்களில் வீழ்ச்சியடைந்து கொண்டு போகும் நிலைமை காணப்பட்டது.

ஆனால் டச்சு நிர்வாகம் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பாழடைந்த குளங்களைத் திருத்தியமைத்து நெல் உற்பத்தியைப் பெருக்குவதில் எதுவித அக்கறையையும் பெரிதாகக் காட்டவில்லை. பதிலாக அரிசித் தட்டுப்பாட்டை ஒழிப்பதற்கு இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தது.

பாரிய செலவுகளைச் செய்து உற்பத்தியைப் பெருக்கி உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச் செய்வதற்கான எந்த நடவடிக்கைகளுக்கும் டச்சு அரசாங்கம் ஒருபோதும் தயாராக இருந்திருக்கவில்லை எனத் தெரிகிறது.

உள்நாட்டில் உள்ளவற்றை எப்படித்தாம் சூறையாடலாம் என்பதிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கின்றனர் என்பதனை மேற்படி நிலைமைகள் தெட்டத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

ஏற்கனவே பனைமரங்கள் இந்தியாவுக்கு ஏற்றப்பட்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டது. ஆண் பனைகள் மட்டுமே முதலில் வெட்டப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது.

பெண் பனைகளை வெட்டுவதை டச்சு அரசாங்கம் செய்திருந்தது. அவற்றை வெட்டுவதனால் உள்ளூர் மக்களின் அன்றாட உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்பதன் பொருட்டே அவர்கள் பெண் பனைகளை வெட்டுவதற்குத் தடை போட்டிருந்தனர்.

ஆனால் 1704 ஆம் ஆண்டு அறிக்கையின்படி பெண் பனைகளும் வெட்டப்பட்டு ஏற்றும்தி செய்ய அனுமதிக்கப்பட்டது. பழைய மரங்கள் பரவலாக வெட்டப்படுவதன் மூலம் பனை மரங்களுக்கு விதிக்கப்பட்ட வரியைப் பெற முடியாமற் போய்விடும் என்பதனாலேயே முதலில் டச்சுக்காரர் பெண் பனைகளை வெட்ட வேண்டாம் எனச் சட்டம் இயற்றினரோ என மேற்படி நிகழ்வு சந்தேகங்களை எழுப்புகின்றது.

மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னிப் பிரதேசங்களிலிருந்து வெட்டப்பட்ட நல்ல தரமான கருங்காலி, முதிரை மரங்களை பற்றேவியா, நெதர்லாந்து நாடுகளுக்கு டச்சுக்காரர் அனுப்பியிருக்கின்றனர். 1669களில் வான் கோன்ஸ் 100 குடும்பங்களை இந்தியாவிலிருந்து கொண்டு வந்து மேற்படி மரங்கள் வெட்டும் வேலையில் ஈடுபட வைத்துள்ளார்.

மேலும் கட்டடங்கள் கட்டுவதற்கும் கப்பல்கள் கட்டுவதற்கும் தேவையான மரப் பலகைகளை அதிக செலவின்றிப் பெறுவதற்காக வான் கோன்ஸ் மட்டக்களப்பில் மரம் அரியும் ஆலை ஒன்றை 1678 ஆம் ஆண்டில் நிறுவியிருக்கின்றார்.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் ஒரு வெடி மருந்து ஆலையை நிறுவி வங்காளத்திலிருந்து கந்தகம் (Sulphur) இறக்குமதி செய்யப்பட்டு வெடி மருந்து தயாரிக்கப்பட்டது. இதற்கான காரணம் மேற்படி பிரதேசங்களில் நல்ல கரியைத் தரும் காட்டு மரங்கள் தாராளமாகக் கிடைக்கப் பெற்றமையாகும்.

(தொடரும்)

# பொலிஸார் சுட்டுக்கொலை! கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணை

(வவுணதீவு)

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸார் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை செய்யப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் தொடர்ந்து விசாரணை செய்யப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு, வலையிறவு பாலம் அருகில் பொலிஸ் வீதிச்சோதனைச் சாவடியில் கடந்த மாதம் 29ஆம் திகதி நள்ளிரவு கடமையில் இருந்த பொலிஸார் இருவர் இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியும் கத்தியால் குத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### மிருகங்கள் மீது மிகுந்த இரக்கமுடையவர்

# தாய் மீதான குற்றச்சாட்டை மறுக்கும் நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பில் ஷிராந்தி ராஜபக்ஷ உத்தரவிட்டதாக தனது தாய் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.


Namal Rajapaksa @RajapaksaNamal · 17h
Completely rejecting this ridiculous allegation. Anyone who knows my mom, knows she has a special place in her heart for animals & would never even think such a thing. Cannot believe the extent to which the propaganda is willing to go.

Sharmini Serasinghe
Please share this post as widely as possible

Last Thursday, 5th of December, I had to save a dog locked up without any food or water in a vacant house for 5 days by its owner, next door to mine. I went to the police made an entry and the police were extremely obliging. I finally managed to get the dog out, with the help of several police officers. That same evening, Mahinda Rajapaksa's wife, Shiranthi, on behalf of the owner of the house (one of her stooges), had called the OIC of the Police station and demanded that he immediately transfer all the Police officers who helped me to save this poor animal's life!!!

அதாவது கடந்த 5ஆம் திகதி வீடொன்றிலிருந்து 5 நாட்கள் உணவு வழங்கப் படாமல் கட்டிவைக்கப்பட்டிருந்த நாயொன்று பெண்ணொருவரால் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மீட்கப்பட்டதாகவும் இதனையடுத்து குறித்த வீட்டின் உரிமையாளர் சார்பில் முன்வந்த ஷிராந்தி ராஜபக்ஷ அன்று மாலையே நாயை மீட்டெடுத்த பொலிஸாரின் இடமாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுத்தாரென சர்மினி சேரசிங்க என்ற பெண் டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்தே சமூக வலைத்தளங்களில் ஷிராந்தி குறித்து அவதூறுகள் பரப்பப்படுவதாகவும், அதில் எவ்வித உண்மையுமில்லையென பதிவிட்டுள்ள நாமல் ராஜபக்ஷ தனது தாய் மிருகங்கள் மீது மிகுந்த இரக்கமுடையவரெனவும் பதிவிட்டுள்ளார். (இ-7)

# காட்டு யானை வீடொன்றுக்குள் புகுந்து அட்டகாசம்

(அம்பாறை)



அம்பாறை நகர எல்லையில் இருக்கின்ற நவகம்புர கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானை வீடொன்றுக்குள் புகுந்து அந்த வீட்டை சேதப்படுத்தியுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வீட்டில் அறையொன்றில் உறங்கிக் கொண்டிருந்துள்ளதுடன், வீட்டின் ஜன்னலை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் புகுந்த காட்டு யானை சேதம் விளைவித்துள்ளது.

இதனையடுத்து உரிமையாளர் அறை ஜன்னல் ஊடாக வீட்டிற்கு வெளியே ஓடிச் சென்று உயிர் பிழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டிற்குள்இருந்த யானை வீட்டு சுவர்களையும் இடித்து சேதப்படுத்தியுள்ளது.

இதனையடுத்து அருகில் இருந்த மற்றொரு வீட்டிற்கு சென்றுள்ள காட்டு யானை வீட்டுக்கதவு , மற்றும் ஆட்டோ ஒன்றுக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

தேசிய உணவு ஊக்குவிப்பு நிலையத்தினால் தேசிய உணவு அரங்கம் கடந்த 7 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. முன்னாள் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, முன்னாள் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இலங்கையின் தேசிய உணவுவகைகள் திருவிழாவில் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1582

Search for people, places and things

### அற்புதன்

நிழலின் அருமை வெயிலில் தெரியும்
ஒருவரின் மதிப்பு அவரின் பிரிவில் தெரியும்



### கபிசன்

அன்பு போலியானால் வாழ்கின்ற வாழ்வும்
போலியாகிவிடும்



### இளங்கோவன்

எவ்வளவு வசதி படைத்தவர்களாலும் வாங்க
முடியாத ஒன்று மன நிறைவான மகிழ்ச்சி



### வேணி

வாழ்க்கையில் யாரையும் ஏமாற்றி
ஜெயிக்கக்கூடாது. ஆனால் ஏமாற்றியவரை
ஜெயிக்காமல் விடக்கூடாது



### பிரியா

உன்னை மதிக்காத இடத்தில்
பிணமாகக்கூட இருக்காதே



### சாருஜா

தேவைக்காகப் பழகும் நண்பர்களைவிட
பழி தீர்க்கும் எதிரிகள் மேலானவர்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண

# பொதுத் தேர்தலை நடத்தி ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்க வேண்டும்

## ஹிஸ்புல்லா வலியுறுத்து



(ஏறாவூர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக உருவாகியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொதுத் தேர்தலை நடத்தி ஸ்திரமான -உறுதியான அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் 35 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கும் நிகழ்வு மற்றும் புதிய மக்கள் குடியேற்ற கிராமமான ஏறாவூர் அப்துல் மஜீத் மாவத்தை பிரதான வீதி ஒரு கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு என்பன நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் பாரிய எதிர்பார்ப்போடும் - நம்பிக்கையோடும் நல்லாட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்க வாக்களித்தனர்.

ஆனால், அந்த அரசின் பிரதானியான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை.

இலங்கை மத்திய வங்கி கொள்ளையின் ஊடாக நாட்டின் பொருளாதாரம் சூறையாடப்பட்டது. 150 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி இன்று 182 ரூபாவாக உயர்கின்ற அளவு நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்துள்ளது.

உணவுப் பொருட்கள், எரிபொருட்கள் என அத்தியாவசிய பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. நாட்டில் மது, போதைப் பொருள் பாவனை, பாதாள உலக கோஷ்டிகளின் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன.

நாட்டு மக்களின் எதிர் பார்ப்புக்களை முன்னாள் பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கம் செய்யத்தவறியது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பவுமில்லை, வறுமையை போக்க வழி செய்யவும் இல்லை.

வட-கிழக்கு மாகாணங்களில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தீர்மானித்தது. அப்போது அந்த அமைச்சின் இராஜாங்க அமைச்சராக நான் இருந்தேன்.

ஒரு வீடு 13 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டது. 50ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கு தேவையான நிதியினையும் நாம் பெற்றிருந்தோம்.

வட-கிழக்கு ம்ாகணங்களில் யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் தமக்கான வீடுகளைக் கட்டித்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, 2017ஆம் ஆண்டில் 10 ஆயிரம் வீடுகளையும், 2018இல் 15 ஆயிரம் வீடுகளையும், 2019இல் 25 ஆயிரம் வீடுகளையும் குறித்த '50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின்' ஊடாக அமைக்க உலக வங்கி 2016 ஆம் ஆண்டு நிதி வழங்கியது.

எனினும், இத்திட்டம் தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட்ட போது ரணில் தெளிவான -உறுதியான தீர்மானங்களை எடுக்காததன் காரணமாக இன்னும் ஒரு வீட்டைக் கூட எம்மால் கட்ட முடியவில்லை.

இதனால் கோடிக்கணக்கான நிதி அப்படியே முடங்கிக்கிடக்கின்றது. மக்களுடைய பிரச்சினைகளை போக்க நாங்கள் முயற்சிக்கின்ற போது பொருத்து வீடா? , கல் வீடா? என்ற பிரச்சினை எழுந்தது. இது தொடர்பில் ரணில் தெளிவான முடிவை எடுக்காததன் விளைவாக கடந்த மூன்றரை வருடங்களில் ஒரு வீட்டைக் கூட எம்மால் கட்ட முடியவில்லை.

ஆகவே, தேவையான சந்தர்ப்பங்களில் உறுதியான- தெளிவான தீர்மானங்களை எடுக்கக்கூடிய சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தலைமைத்துவம் அவசியம்.

வட-கிழக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்கக்கூடிய தலைமைத்துவம் அவசியம் மாறாக இன்னொரு சமூகத்தின் மீது திணிப்புக்களை கொண்டு வந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண முற்படும் தலைமைத்துவங்களுக்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க முடியாது.

எனவே, ஜனாதிபதி, பிரதமரை நீக்கி விட்டு சில தீர்மானங்களை எடுக்க வேண்டி ஏற்பட்டது. இதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு பொதுத் தேர்தலை நடத்துவதே தீர்வாக அமையும். யார் ஆட்சியமைத்தாலும் பாராளுமன்றத்தில்பெரும்பான்மை இல்லாத நிலையில் அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியாது. ஆகவே, ஒருஸ்திரமான - நிலையான அரசாங்கம் உருவாக வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய உறுதியான ஒரு அரசாங்கம் அமைகின்ற போது தான் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். தடைப்பட்ட வீட்டுத் திட்டத்தை கொண்டு செல்ல முடியும்.

வெளிநாட்டு நிதி வளங்களை கொண்டு வர முடியும். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இன ரீதியாக முரண்பாடுகளை களைய முடியும். இவற்றை செய்வதாக இருந்தால் பொதுத் தேர்தலை நடத்தி உறுதியான அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும்.

ஆகவே, பொதுத் தேர்தலின் ஊடாக மட்டும் தான் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அது தொடர்பில் நாங்களும் உறுதியாக உள்ளோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளை நாளை மறுதினம் 12ஆம் திகதிக்கு முன்னர் சுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 160 | 120 | 130 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 85 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 480 | 400 | 450 |
| தக்காளி | 300 | 300 | 320 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 35 | 40 |
| கோவா | 120 | 100 | 100 | 130 | 120 |
| கரட் | 200 | 280 | 240 | 220 | 250 |
| பூசணி | 80 | 50 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 160 | 100 | 110 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 140 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 300 | 350 | 320 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 70 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 280 | 240 | 160 |
| லீக்ஸ் | 200 | 150 | 200 | 120 | 200 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | — | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 300 | 220 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — |
| போஞ்சி | 150 | 150 | 180 | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 110 | 90 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 60 | 35 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 350 | 250 | 260 | 180 | 240 |
| வெங்காயப்பூ | 300 | — | 400 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 20 | ·20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 80 | 120 | 70 |

# செய்தித்துளிகள்

## இலவச சீருடைக்கு இம்முறையும் வவுச்சர்

### கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

அரச பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருட இலவச சீருடையாக துணி வழங்குவது என மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ள போதிலும், வவுச்சர்களையே வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## ஐ.தே.க.-சு.க.இணைந்து பட்ஜெட் நிறைவேற்றம்

(தம்புள்ளை)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் முன்வைக்கப்பட்ட தம்புள்ளை பிரதேச சபைக்கான வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன இணைந்தே இந்த வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளன. இச்சபையிலுள்ள 25 பேர் இந்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இந்த பிரதேச சபையில் மொத்தம் 26 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் மக்கள் விடுதலை முன்னணி" உறுப்பினர் ஒருவர் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் மீதான வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரு இளைஞர்கள் பலி

(களனி)

களனி - பியகம - களனிய வீதி பில்பிடிய வித்தியாலத்தின் அருகாமையில் நேற்று அதிகாலை பாரவூர்தி ஒன்றும் சிற்றூந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டு இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குறித்த விபத்தில் படுகாயமடைந்த 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்கள், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் வெல்லம்பிடிய மற்றும் அங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## ஆமை இறைச்சியுடன் இருவர் கைது

(கொழும்பு)

ஆராய்ச்சிக்கட்டுவ மற்றும் வைரன் கட்டுவ பகுதியில் 20 கிலோ கிராம் ஆமை இறைச்சியுடன் இருவரைக் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 47 மற்றும் 60 வயதுடைய இருவரையும் விசாரணைகளின் பின்னர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(இ-7)

## கடைக்குள் புகுந்த கொள்கலன் வாகனம் மூவர் படுகாயம்


(குருநாகல்)

குருநாகல்-தம்புள்ள வீதியில் கலேவெல பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன மோதலில் கொள்கலன் வாகனம் ஒன்று கடைக்குள் புகுந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் இபோ.ச பேருந்தின் சாரதியும் பயணிகள் இருவருமே காயமடைந்துள்ளனர். காலநிலை பாதிப்பு காரணமாக கொள்கலன் வாகனம் வழுக்கி பேருந்தில் மோதப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இரு வாகனங்களின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக கலேவலப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)




# சீலனின் தந்திரம்



வைரபுரி என்ற நாட்டில் பல கோடிகளுக்கு அதிபனான சீலன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் தயாளகுணம் கொண்டவன். அந்நாட்டு மன்னன் பர்வதனனின் ஆருயிர் நண்பன். பொக்கிஷத்தில் பணக் குறைவு ஏற்பட்ட போதெல்லாம் மன்னனுக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து பிறகு வாங்கிக் கொள்வான் சீலன். அப்படிக் கிடைத்த வட்டிப் பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவி வந்தான் சீலன்.

ஓவியக் கலையில் கைதேர்ந்தவன் சீலன். மற்ற கலைகளிலும் அவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அழகான சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், வேலைப்பாடுடன் கூடிய கைவினைப் பொருள்கள் என்றால் என்ன விலை கொடுத்தாவது வாங்கி விடுவான். ஆனால், அப்படி வாங்கும் பொருள்களை யார் கேட்டாலும் கொடுக்கவும் மாட்டான்.

மன்னன் பர்வதனுக்கு, சீலனின் இந்தப் பிடிவாதக் குணம் ஒன்றுதான் பிடிக்காமல் இருந்தது. அதனால் சீலனிடமிருந்த அழகிய பொருள்களில் ஒன்றைக் கூடப் பெறமுடியாமல் போனது.

ஒரு நாள் சீலனைக் காண வாலிபன் ஒருவன் வந்தான். கிழிந்த ஆடைகளை அணிந்து தாடி வளர்த்துக் கொண்டிருந்த போதிலும் அவன் உயர் குடியில் பிறந்தவன் என்று சீலனுக்கு தெரிந்துவிட்டது. அவன் அந்த இளைஞனை வரவேற்று உட்காரும் படி சொன்னான்.

"ஐயா! என்னை இந்தக் கோலத்தில் கண்டவர்கள் எல்லாரும் விரட்டினார்களே ஒழிய என்னை "உட்கார்" என்று இதுவரை யாரும் சொல்லியதில்லை. மிக்க நன்றி. நீங்கள் கலை அம்சம் கொண்ட பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன்.

"என் பெயர் சக்தி. என் முன்னோர்கள் ஜமீன்தாரர்கள். எங்களுக்குச் சொந்தமான அபூர்வ ஓவியம் ஒன்றைத் தங்களுக்கு விற்க எடுத்து வந்துள்ளேன்," எனக் கூறித் தான் கொண்டு வந்த ஓவியத்தை அவனிடம் காட்டினான்.

அந்த ஓவியத்தைக் கண்டு சீலன் பிரமித்தான். ஒரு தாய் குழந்தையை எடுத்துக் கொஞ்சுவது போன்ற படம் அது. குழந்தை தன் பொக்கை வாயை விரித்து சிரிப்பது மிக அழகாகத் தீட்டப்பட்டிருந்தது. வண்ணங்கள் கண்களுக்கு குளிர்ச்சி தரும் விதமாகத் தீட்டப்பட்டிருந்தன.

"இது கற்பனையில் தோன்றிய படமாக இல்லை. நேரில் நடப்பதை பார்த்து இதனை வரைந்திருக்கிறார் ஓவியர். என்ன நான் சொல்வது சரிதானே?" என்று கேட்டான்.

"நீங்கள் நினைத்தது சரியே. அந்த ஓவியத்தில் உள்ள பெண்மணி என் தாய். அந்தக் குழந்தை நானே. இதனை வரைந்த ஓவியனுக்கு என் தந்தை நூறு ஏக்கர் நிலம் பரிசாக அளித்தார். ஆனால், இப்போதோ நான் அந்த ஓவியத்தை விற்றுப் பிழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன்" என்றான்.

"இந்த ஓவியத்திற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். நீயே இதன் விலையைச் சொல்," என்றான் சீலன். "எனக்கு இதற்காக நூறு பவுன்கள் கொடுத்தால் போதும். அதைக் கொண்டு நான் முன்னுக்கு வந்துவிடுவேன்" என்றான்.

"இவ்வளவு குறைவாகக் கேட்கிறாயே..." என்று கேட்டார் சீலன். "அதற்கு மேல் நான் கேட்கமாட்டேன்!" என்றான் சக்தி. நூறு பவுன்களைக் கொடுத்து அனுப்பினான் சீலன். அன்று மாலை சீலன் தான் வாங்கிய ஓவியத்தை மன்னனிடம் காட்டினான். "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது. இதை எனக்குக் கொடுத்துவிடு," என்றான் மன்னன்.

"நான்தான் இந்த மாதிரி பொருள்களை யாருக்கும் கொடுக்கமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமே. நீங்கள் கேட்டும் பயனில்லை!" என்று கூறிவிட்டான். சில வருடங்கள் சென்றன.

ஒரு நாள் சீலன் மன்னனுடன் பேசிக் கொண்டிருக்கையில் அங்கு வந்தான் சக்தி. அவனை அன்புடன் வரவேற்று மன்னனுக்கும் அறிமுகம் செய்து வைத்தான் சீலன்.

"நீ எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தான் சீலன்.

"ஐயா! நீங்கள் கொடுத்த நூறு பவுன்களைக் கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கி இப்போது உயர் நிலையில் இருக்கிறேன். உங்களிடம் ஒரு உதவியை நாடியே இப்போது வந்திருக்கிறேன்" என்றான்.

"என்ன வேண்டும்?" "நான் அந்த ஓவியத்தைத் தங்களுக்கு விற்ற நாளிலிருந்து எனக்கு மனநிம்மதியே இல்லை. தயவு செய்து அதை நீங்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். அதற்காக நீங்கள் என்ன கேட்டாலும் நான் கொடுக்கிறேன்," என்றான்.

சக்தியின் மனநிலை அவனுக்குப் புரிந்தது. ஆனால், மன்னனோ தான் கேட்டும், அந்த ஓவியத்தைக் கொடுக்க முடியாது என்று கூறிய சீலன் என்ன செய்யப்போகிறான் என்று கூர்ந்து கவனிக்கலானான். "நான் ஒருமுறை ஒரு பொருளை வாங்கிவிட்டால் அதை யாருக்கும் கொடுக்கமாட்டேன். இது என் கொள்கை" என்றான்.

"என் தாயின் மீது வைத்துள்ள பாசத்தால்தான் அந்த ஓவியத்தைக் கொடுக்கும்படிக் கேட்கிறேன். எனக்காக உங்கள் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்துங்கள்" என்று வேண்டினான்.

அவனுக்கு எப்படி உதவலாம் என யோசித்த சீலன், "சக்தி நீ உன் தாயின் மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது. அதனால் உனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறேன். நான் ஓவியக் கலையில் ஓரளவு பயிற்சி பெற்றவன் என்பது உனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.

"அதனால் நீ கொடுத்த ஓவியம் போலவே நான் மற்றொரு ஓவியம் தீட்டுகிறேன். இதற்கு ஒருவார காலம் பிடிக்கும். இரண்டு ஓவியங்களில் எது முதலாவது வரையப்பட்டது என்று கண்டுபிடித்து உன் ஓவியத்தை எடுத்துச் செல். இந்தப் பரீட்சைக்கு நம் மன்னரே நடுவர்!" என்றான். சக்தி அதற்குச் சம்மதித்தான்.

சீலன் ஒருவார காலத்தில் சக்தி கொடுத்த ஓவியம் போல மற்றொரு ஓவியத்தை வரைந்துவிட்டான். இரு ஓவியங்களையும் அவன் குறித்த நாளன்று மன்னன் முன் கொண்டு போய் வைத்தான். அதேநாளில் அங்கு வந்தான் சக்தி.

அந்த இரு ஓவியங்களையும் பார்த்துவிட்டு தான் சீலனுக்கு விற்ற ஓவியம் எது என்பதைக் கண்டு பிடித்துக் காட்டினான். "சக்தி! நீ வென்றுவிட்டாய். அதுதான் நீ எனக்கு விற்ற ஓவியம். அதனை நீ எடுத்துக் கொண்டு போகலாம்" என்றான். மன்னனும் அந்த இரு ஓவியங்களையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, "இரண்டு ஓவியங்களும் ஒன்று போலத் தானே உள்ளன. எப்படி ஓவியத்தைக் கண்டுபிடித்தாய்?" என்று கேட்டான்.

"அரசே! சீலன் மிகச் சிறந்த ஓவியர் என்பதில் சந்தேகமே இல்லை. அவர் எவ்வளவு கூர்ந்து கவனித்து ஓவியம் தீட்டி இருக்கிறார் என்பதற்கு இந்த ஓவியத்தில் என் தாயின் இடது காதின் ஓரமாக உள்ள சிறுமச்சத்தைக் கூட ஓவியத்தில் தீட்டி இருப்பதை எடுத்துக் காட்டலாம்.

"நான் விற்ற படத்தில் என் தாயாரின் மூக்குத்திக் கல் நீல நிறத்தில் உள்ளது. ஆனால், சீலன் தீட்டிய ஓவியத்தில் அது சிவப்பு நிறத்தில் உள்ளது. இந்த சிறு வித்தியாசத்தைக் கொண்டு என் ஓவியம் எது என்று கண்டு கொண்டேன். ஆனால், இந்தச் சிறிய தவறை கைதேர்ந்த ஓவியரான சீலன் எப்படிச் செய்தார் என்றுதான் எனக்குப் புரியவில்லை," என்று கூறி அவர்களை வணங்கிவிட்டுத் தன் ஓவியத்தை எடுத்துக் கொண்டு சென்றான்.

"சீலா... நீ ஏன் தவறு செய்தாய் என்பது சக்திக்கு புரியாமல் இருக்கலாம். ஆனால், எனக்குத் தெரியும். தாய் மீது அன்பு கொண்டு சக்தி படத்தை கேட்டதும் உனக்கு அவன் மீது இரக்கம் வந்துவிட்டது. அதே சமயம் உடனே கொடுத்துவிட்டால், என்னுடைய கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்பதால் போட்டி வைப்பது போல் வைத்து, அதற்கு என்னையே நீதிபதியாக்கி வேண்டுமென்றே தவறு செய்வதுபோல் செய்து சக்தியிடம் படத்தை கொடுத்து விட்டாய். உன்னுடைய திறமையை பாராட்டுகிறேன்!" என்றான். பிரச்சினை தீர்ந்ததை எண்ணி நிம்மதி பெருமூச்சு விட்டான் சீலன்

## தூங்கும் பழக்கம்



நன்றாகத் தூங்கும் பழக்கத்தைப் பற்றிக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது மிகவும் அவசியம். இரவு நீண்ட நேரம் விழித்திருந்தால், அது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்பதை அவர்களுக்குப் புரிய வையுங்கள். அவர்கள் அதனை பின்பற்றப் பெற்றோர்கள் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பழமொழிகள்

- பார்க்கப் பசுபோல; பாய்ந்தால் புலிபோல.
- அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
- காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்.
- ஈட்டி எட்டும் மட்டும்; பணம் பாதாளம் மட்டும்.
- உரலுக்கு ஒரு பக்கம்; மத்தளத்துக்கு இரு பக்கம்.
- மந்திரம் கால்; மதி முக்கால்

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி.

*- தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்காக ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு அதிகாரமற்ற ஒரு செயல்.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது. எனவே ஜனாதிபதியின்அறிவிப்பை இரத்துச் செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு மீதான விசாரணை நடந்து வருகின்ற நிலையில், பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டென சட்டமா அதிபர் திணைக்களம் தனது வாக்குமூலத்தை உயர்நீதிமன்றில் முன்மொழிந்துள்ளது.

அதேநேரம் வழக்கைத் தாக்கல் செய்த தரப்புகளின் சட்டத்தரணிகள் தங்கள் வாதத்தில், பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும் 19 ஆவது அரசியலமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு இந்த பாராளுமன்றக் கலைப்பு அதிகாரம் நீக்கப்பட்டுள்ளதென்றும் வாதிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்றைய தினம் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்ததும் நாட்டின் அரசியல் சூழ்நிலை குறித்த சர்ச்சைகளுக்கும் குழப்பங்களுக்கும் ஒரு முடிவு கிடைக்கும் என நம்பலாம்.

பாராளுமன்றத்தைக் கலைத்தது சரி என்றும் அந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டென்பதாகவும் நீதிமன்றத் தீர்ப்பு அமைந்தால் நாடு பொதுத் தேர்தலுக்குத் தன்னைத் தயார் செய்யும்.

தவிர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கான அழுத்தங்கள், அவர் தொடர்பான விமர்சனங்கள் முடிவுக்கு வரும்.

அதேநேரம் தேர்தல் களத்தில் ஏகப்பட்ட கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் களமிறங்கி பெரும் பிரளயம் தாண்டவமாடும்.

நடக்கின்ற தேர்தல் முன்பு எப்போதும் இல்லாத வன்முறைகளையும் வன்செயல்களையும் சந்தித்துக் கொள்ளும்.

தேர்தல் முறைப்பாடுகள் மலியும் என்றளவில் அதனைப் பார்க்கலாம்.

மாறாக, பாராளுமன்றத்தைக் கலைத்தது தவறானது. அவ்வாறு பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பது தீர்ப்பாக அமைந்தால்;

ஜனாதிபதி மைத்திரியின் நிலைமை மிகவும் இறுக்கமானதாக இருக்கும்.

பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் இல்லாமல் அதனைச் செய்த ஜனாதிபதி அரசியலமைப்பை மீறியுள்ளார் என்ற கோசங்கள் வானுயரும்.

தனது பதவியை உடனடியாக ஜனாதிபதி இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கருத்துக்கள் கொடிகட்டிப் பறக்கும்.

ஆக, எது நடக்கப் போகிறது என்பதை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புத்தான் தீர்மானிக்கும். சுருங்கக்கூறின் நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என்று பாடுவதைத் தவிர, நமக்கு வேறு எதுவுமில்லை.

# விவசாய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(பொலநறுவை)

விவசாய உற்பத்திகளை மேம்படுத்தி, நாட்டில் சிறந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவும் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாயமான விலையினை பெற்றுக்கொடுப்பதனூடாக அவர்களை கடன் சுமையிலிருந்து விடுவிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் தேசிய அபிவிருத்தி திட்டங்களில் பிரதான வேலைத் திட்டமாக கருதப்படும் விவசாயிகளின் தானிய களஞ்சிய நிலையங்கள் நாடளாவிய ரீதியில் நிறுவுவதற்கான வேலைத்திட்டம் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

அதனடிப்படையில் நிர்மாணிகக்பட்ட பொலநறுவை மெதிரிகிரிய தானிய களஞ்சிய நிலையம் நேற்று முற்பகல் ஜனாதிபதியால் மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

தமது உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கு உரிய இடம் இன்மையாலும் அதிக கடன் சுமையின் காரணமாகவும் அறுவடையின் பின்னர் தங்களது உற்பத்திகளை குறைந்த விலைக்கு தனியார் துறையினருக்கு வழங்கும் நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன்போது உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைக்கப்பெறாததுடன், இடைத்தரகர்கள் அதனூடாக பாரிய இலாபத்தினை ஈட்டுகின்றனர். நீண்டகாலமாக விவசாயிகள் முகங்கொடுத்து வந்த இந்த பிரச்சினைக்கு இச்செயற்திட்டத்தினூடாக தீர்வு காணப்படுவதுடன், எதிர்காலத்தில் நாடு பூராகவும் இத்தகைய செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென்றும், நெல் உற்பத்தக்கு மாத்திரமின்றி பழங்கள் மற்றும் மரக்கறி உற்பத்திகளுக்கும் இத்தகைய களஞ்சியசாலை வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உணவு பாதுகாப்பு தொடர்பிலான பிரச்சினைகளுக்கும் நெல் விலை வீழ்ச்சி தொடர்பிலான பிரச்சினைக்கும் இதனூடாக தீர்வு காணப்படுவதுடன், உற்பத்தியாளர்களை பாதிப்பிலிருந்து பாதுகாப்பதுடன், கொள்வனவாளர்களின் விலைக்கன்றி, உற்பத்தியாளர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு விநியோகிப்பதற்கான சந்தர்ப்பம் விவசாயிகளுக்கு ஏற்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த தானிய களஞ்சிய நிலையத்தில் 100 கிலோ வோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய மின்சக்தி கட்டமைப்பு இயங்கி வருவதுடன், அதனூடாக உற்பத்தி செய்யப்படும் மேலதிக மின்சக்தியை தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதும் விசேட அம்சமாகும்.

தானிய களஞ்சிய நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அதனை பார்வையிட்டார். கடந்த போகத்தில் பயிர்ச் சேதம் ஏற்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டதுடன், 3634 விவசாயிகளுக்கு சுமார் ஏழரை கோடி ரூபாய் நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை குறிக்கும் முகமாக 20 விவசாயிகளுக்கு ஜனாதிபதியினால் நஷ்டஈடுகள் வழங்கி வைக்கப்பட்டது. தானிய களஞ்சிய நிலையத்திற்கு நெல்லை கையளித்த 03 விவசாயிகளுக்கு அதற்கான பற்றுச்சீட்டு ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. (மு-3)

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் வீதியால் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை 7 மணியளவில் கல்வியங்காடு எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் அரசடி வீதி, நல்லூரைச் சேர்ந்த 38 வயதுடைய மகாலிங்கம் தவனேஸ என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மாரடைப்பால் உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-3,9)

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கேரள கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பேருந்தில் கஞ்சா கடத்துவதாக வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் சோதனை மேற்கொண்ட போது சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நபரின் பயணப் பையிலிருந்து ஒரு கிலோ 425 கிராம் கேரள கஞ்சாவினை தம்வசம் வைத திருந்த வெற்றிலைக்கேணி பிரதேசத்தினை சேர்ந்த 45 வயதுடைய விக்னேஸ்வரன் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின்பின்னர்இன்றையதினம வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக வவுனியா பொலிஸார தெரிவித்தனர். (மு-281)

### பலத்தையும் பலவீனத்தையும்...

- உங்கள் "பலம்" உங்களுக்கு நன்றாக தெரிந்திருக்க வேண்டும்.
- எதிராளியின் "பலவீனத்தை" நேரம் வரும்போது வெல்ல வேண்டும்.
- உங்களது "பலவீனத்தை" வெளிப்படையாக காட்டக் கூடாது.
- உங்கள் "பலம்" எவ்வளவு என்பதை காட்டிலும் பாறைகளை உடைக்கும் சக்தி வேர்களுக்கும் உண்டு என்பதை உணர்ந்திருக்க வேண்டும்.
- பலவீனத்தை வேரோடு அழியுங்கள் அப்போது தான் உங்கள் பலம் இன்னும் உறுதியான பலமாகும்.

## கான்ஸ்டபிள் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல்

### கணவன் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

அநுராதபுரத்தில் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் வீட்டின் மீது நேற்றுக் காலை கைக்குண்டுத் தாக்குதல மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ள அறையில் தானும் தனது 2 வயது மகளும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில், இனந்தெரியாத நபர்களால் ஜன்னல வழியாக வீசப்பட்ட கைக்குண்டானது, நுளம்பு வலையின் மீது பட்டு, கீழே நிலத்தில் விழுந்து வெடித்ததாக குறித்த பெண் கான்ஸ்டபிள் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தனது கணவரான இராணுவச் சிப்பாய் மீது சந்தேகங் கொள்வதாகவும், தனக்கும் அவருக்கும் இடையிலான விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் பொலிஸாரின் விசாரணைகளின் போது அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அறிவென்னும் ஆயுதம்



சிக்கலை விரைவாகத் தீர்த்துவிட வேண்டி உணர்ச்சிவயப்பட்டுச் செயலாற்றினால் பெரும்பாலும் அச்சிக்கல் பெருகி விடும். மனிதன் எப்போதும் தன் செயலால் எந்தச் சிக்கலையும் முடிவுக்குக் கொண்டு வருவதில்லை. எங்கு ஒரு சிக்கலை முடித்ததாக எண்ணுகிறானோ அங்கேயே, அதன் வேரிலேயே மற்றொன்று முளைத்து விடும்.

மகளுக்குத் திருமணம் முடிந்துவிட்டால், தனது கவலையெல்லாம் தீரும் என ஒருவர் எண்ணுவார். ஆனால், மணம் முடிந்த பின்னர் எத்தனைச் சிக்கல்கள் எழுகின்றன. வீடு ஒன்று கட்டிவிட்டால், இரண்டு ஏக்கர் நிலம் வாங்கிவிட்டால், இதுபோன்றே ஏதோ விரும்பியதை அடைந்து விட்டால் வாழ்வில் கவலைகள் தீரும் என்று கற்பனை செய்து கொள்வோம். ஆனால், உண்மை என்ன? எதை முடிப்பதாக எண்ணுகிறோமோ, அங்கேயே இன்னொன்று தொடங்கி விடும். அதிலிருந்து பல கவலைகள் கிளைவிடுவதும் உண்டு.

எல்லாச் சிக்கல்களுக்கும் முடிவு இயற்கையிலேதான் உண்டு. ஒவ்வொருசிக்கலையும் வெற்றி கொள்வது தெளிந்து தேர்ந்த அறிவேயாகும். அத்தகைய அறிவு எல்லோரிடமுமிருக்கிறது. அதைத் தூண்டி, அதையே வலுவுள்ள ஆயுதமாகக் கொண்டு கவலைகளை ஒழித்து வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் பெறுவோம்.

# இலங்கை அணியில் தமிழர்களுக்கு இடமில்லையென்பது

# தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையே - முரளிதரன்



இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழர்களிற்கு இடம்கொடுக்க மாட்டார்கள் எனப் பல தமிழர்கள் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் அப்படி நினைக்கிறார்கள். அப்படி நினைத்துக் கொண்டு, அணிக்குள் வருவதற்கு எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கிறார்கள். இது ஒரு தாழ்வுமனப்பான்மை. இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையின் முன்னாள் சுழற்பந்து நட்சத்திரம் முத்தையா முரளிதரன்.

இலங்கை அணியின் சுழல் நாயகன் முத்தையா முரளிதரன் மலையக தமிழ் ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது பாடசாலைக் கால கிரிக்கெட், இலங்கை அணிக்குள் நுழைந்தது குறித்து கேள்வியெழுப்பிய போதே இதனைத் தெரிவித்தார்.

"நான் சென் அன்ரனீஸ் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தே கல்வி கற்றேன். அங்குதான் கிரிக்கெட் ஆர்வம் ஏற்பட்டு, கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தேன்.

இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழர்களிற்கு இடம்கொடுக்க மாட்டார்கள் எனப் பல தமிழர்கள் என்னிடம் சொன்னார்கள். அவர்கள் அப்படி நினைக்கிறார்கள். அப்படி நினைத்துக் கொண்டு, அணிக்குள் வருவதற்கு எந்த முயற்சியும் செய்யாமல் இருக்கிறார்கள். இது ஒரு தாழ்வுமனப்பான்மை.

ஆனால் உண்மை அப்படியல்ல. திறமையிருந்தால் நீங்கள் அங்கு செல்லலாம். நான் முயற்சி செய்தேன். திறமையிருந்ததால் அணிக்குள் சென்றேன். திறமையிருந்தால் எங்கும் செல்லலாம். பிரச்சினை நம்மவர்களின் தாழ்வுமனப்பான்மைதான்" எனத் தெரிவித்துள்ளார்.

"பந்துவீச்சு சர்ச்சை ஏற்பட்டபோது அந்த சவாலை எதிர்கொள்ள எனது குடும்ப சூழல்தான் உதவியது. 1977 இல் எனது குடும்பம் பாதிக்கப்பட்டது. எங்கள் ஊரிலிருந்து பலர் இந்தியாவிற்கு திரும்பி போனார்கள். ஆனால் அப்பா அப்படி முடிவெடுக்கவில்லை. இது எங்கள் நாடு. இங்கேதான் வாழ வேண்டுமென முடிவெடுத்தார். வர்த்தகத்திலும் வென்றார். அப்படித்தான் நானும். பிரச்சினைகளைக் கண்டு ஓட முடியாது. அந்தப் பிரச்சினை நேரம் அணியும், நாடும் எனக்கு ஒத்துழைத்தது" என்றார்.

அரசியலுக்கு வருவீர்களா என்ற கேள்வியெழுப்பப்பட்டபோது, "இல்லை. எனக்கு அரசியல் தெரியாது. தமிழ் சினிமாவில்தான் சினிமாவைப் பார்த்து தெரிந்து கொண்டேன். அதில் அரசியல்வாதிகளை எப்படி காட்டுகிறார்கள். மக்களிடம் கொள்ளையடிக்கிறார்கள். இப்படியான அரசியல்வாதியாக வர விரும்பவில்லை" எனத் தெரிவித்தார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இறுதிப் போட்டியிலும் சதமடித்தார் கம்பீர்




ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில், டில்லியில் நடந்து வரும் ஆந்திராவுக்கு எதிரான ஆட்டத்தில் 3 ஆவது நாள் முடிவில் டில்லி அணி 7 விக்கெட் இழப்புக்கு 409 ஓட்டங்கள் குவித்து 19 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. கவுதம் கம்பீர் 185 பந்துகளில் 10 பவுண்டரியுடன் 112 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

இந்தப் போட்டியுடன் கிரிக்கெட்டில் இருந்து விடைபெறும் கம்பீர் முதல் தர போட்டியில் பதிவு செய்த 43 ஆவது சதம் இதுவாகும்.

நல்ல போர்மில் இந்திய அணியில் இடம் கிடைக்காமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட கம்பீர் அண்மையில் கனத்த மனதுடன் கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுகின்றேன் எனத் தனது கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.

இந்நிலையில் கம்பீர் இந்தப் போட்டியுடன் முதல் தரப் போட்டிகளில் இருந்தும் விடைபெறுகிறார். நல்ல திறமை இருந்தும் புறக்கணிக்கப்பட்ட கம்பீர் தன்னை நிரூபித்துவிட்டே கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுகின்றார் என அவரது ரசிகர்கள் வருத்தம் தெரிவித்து வருகின்றனர். (க)

## திணறும் முரளிவிஜய் அடுத்த போட்டி சந்தேகமே



இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய வீரரான முரளி விஜய் ஜொலிக்காததால் அடுத்த போட்டியில் இடம்பெறுவது சந்தேகமாகியுள்ளது.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதல்டெஸ்ட்போட்டி நடைபெற்று வருகிறது.

இதில் மிகுந்த போராட்டத்துக்கு பின்னர் இடம்பிடித்த முரளி விஜய், வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இரண்டு இன்னிங்ஸ்களிலும் 11, 18 ஓட்டங்களே எடுத்துள்ளார். இரண்டு முறையும் ஸ்டார்க் பந்தில் ஓஃப்-சைட் சென்ற பந்தில் எட்ஜ் ஆகி கட்ச் பிடிக்கப்பட்டு ஆட்டமிழந்தார். ப்ரித்விஷா காயமடைந்த காரணத்தினாலேயே முரளி விஜய்க்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. தற்போது அவரது காயம் குணமடைந்து வருவதால் சரியாக ஓட்டங்கள் குவிக்காத நிலையிலும் இரண்டாவது டெஸ்ட்டில் வாய்ப்புக் கிடைப்பது சந்தேகம் தான். (க)

## சபாஸ் மத்தியூஸ் அசத்தல் சதம்



நியூசிலாந்து லெவன் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில், இலங்கை அணி வீரர் அஞ்சலோ மத்தியூஸ் அபார சதம் விளாசியுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 15 ஆம் திகதி தொடங்க உள்ளது.

இதற்கு முன்பாக, நியூசிலாந்து லெவன் அணியுடனான 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் இலங்கை அணி விளையாடுகிறது. நேபியரில் நேற்று தொடங்கிய இந்தப் பயிற்சி ஆட்டத்தில், இலங்கை அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. தொடக்க வீரர்கள் சொதப்பிய நிலையில், பின்னர் வந்த தலைவர் தினேஷ் சண்டிமல் 26 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து வந்த அஞ்சலோ மத்தியூஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், அவருக்கு துணையாக எந்த வீரரும் நிலைத்து நிற்கவில்லை. சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்த நிலையில், மத்தியூஸ் தான் சந்தித்த பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். அவ்வப்போது சிக்சர்களும் அடித்த மத்தியூஸ் சதம் விளாசினார். எனினும் ஏனைய வீரர்கள் அடுத்தடுத்து அவுட் ஆனதால், இலங்கை அணி 59 ஓவர்களில் 210 ஓட்டங்களுக்கு சுருண்டது.

மத்தியூஸ் 177 பந்துகளில் 128 ஓட்டங்கள் எடுத்து அவுட் ஆகாமல் இருந்தார். அவரது ஸ்கோரில் 3 சிக்சர் மற்றும் 19 பவுண்டரிகள் அடங்கும். நியூசிலாந்து லெவன் தரப்பில் பிளேக் கோபர்ன் 3 விக்கெட்டுகளும் ஸ்னீடென் மற்றும் பீட்டர் யெங்ஹஸ்பண்ட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளும் வீழ்த்தினர். (க)

## வெற்றிப் பெருமிதத்தினால் விருந்தினரை மதிக்காத வில்லியம்ஸ்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றிய நிலையில், பரிசளிப்பு விழாவில் வில்லியம்ஸ் நடந்து கொண்ட விதம் கடும் விமர்சனத்திற்குள்ளாகி வருகிறது.

நியூசிலாந்து ஐக்கிய அரபு அமீரகத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று விதப் போட்டிகளில் விளையாடியது.

இதில் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை பாகிஸ்தான் அணி வெள்ளையடிப்பு செய்தது. அதன் பின் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என்று சமநிலை ஆனது.

இதையடுத்து நடந்த மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்று நியூசிலாந்து அணி வென்றது. இதற்கான பரிசளிப்பு விழாவின் போது கோப்பையைப் பெறுவதற்காக நியூசிலாந்து வீரர் வில்லியம்சன் அழைக்கப்பட்டார்.

கோப்பையை வழங்கும் விளம்பரதாரர்களின் பெயர்களைப் படித்தார். விளம்பரதார் கோப்பையைக் கொடுக்கும் முன்பே வில்லியம்சன் கோப்பையைத் தானாக எடுத்துக் கொண்டே, கோப்பையுடன் போட்டோவுக்குப் போஸ் கொடுக்கச் சென்றார்.

அப்போது நியூசிலாந்து வீரர் கையில் வைத்திருந்த பரிசுத்தொகைக்கான விளம்பர அட்டையையும் அவரிடமிருந்து பிடுங்கி எறிந்தார்.

இது தொடர்பான வீடியோ சமூகவலைத்தளங்களில் வெளியாகியதால், வில்லியம்ஸ் கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளார். (க)

## ரணிலின் பலம்...

களின் உதவியுடனும், புலம்பெயர் புலி அமைப்புகளின் உதவியுடனும் தன்னை பிரதமராக நியமிக்க ரணில் அழுத்தம் கொடுக்கின்றனர். இதுவே ரணிலின் பலம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் புதிய அரசியல் அமைப்பினை கொண்டுவந்து வடக்கு கிழக்கினை இணைக்க தமிழ் தரப்பு சந்தர்ப்பம் பார்த்து காத்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மொரட்டுவ பிரதேசத்தில் அவரது ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (மு)

## தமிழ் மக்கள் மகி...

ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவினைத் தெரிவித்தோம் என புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை தொடர்பாக நடுநிலை வகிக்குமாறு கூறுகின்றபோதிலும் அவ்வாறு நடுநிலை வகிப்பதானது மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்கு சமமாகவே பார்க்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ஷவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதன் காரணமாகவே நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவினை தெரிவித்தோம்.

பொதுத்தேர்தல் ஒன்றை ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றினால் இன்று காணப்படும் குழப்பநிலை மேலும் அதிகரிக்கும்.

இரண்டு தேசிய கட்சிகளும் தங்களின் ஆட்சியிலேயே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நோக்கில் செயற்படுகின்றனர். இதில் சிறுபான்மையினரின் நலன்கள் தொடர்பாக அவர்கள் எதுவும் சிந்திக்கப்போவதில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (மு)

## தேசியத்துக்கும்...

இதனை நாட்டு மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ள அவர், மேலும் கூறுகையில்,

ஜனநாயகத்தை பலப்படுத்த வேண்டிய நாட்டில் தனி நபரின் கீழான ஆட்சி இடம்பெற்றுவதை நான் ஒருபோதும் விரும்பவில்லை. அவ்வாறான தனி நபர் ஆட்சி இந்த நாட்டுக்கு எப்போதும் அவசியம் அல்ல. கடந்த சில தினங்களாக பிரதமர், அமைச்சரவை இல்லாது முழுப் பொறுப்பையும் நான் மிகவும் பொறுப்புடன் பொறுமையுடன் சரியாகவும் செய்து வருகின்றேன்.

ஆகவே இந்த நிலைமையை நீதிமன்றம் கருத்தில் கொண்டு நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்தவும், பொருளாதாரத்தை பலப்படுத்தவும் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தவும் குறிப்பாக ஆண்டு இறுதியில் கொண்டுவரும் வரவு -செலவு திட்டத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளதால் நீதிமன்றம் இவற்றை கருத்தில் கொண்டு விரைவாக ஒரு தீர்ப்பினை தருவார்கள் என நான் நம்புகின்றேன் எனவும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை பொலநறுவையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். (மு-3)

## மைத்திரியுடன்...

இடம்பெற்றுள்ளது இதன்போது இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கட்சி காரியாலயத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் இந்த சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டது என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இன்று ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக குறிப்பிட்டார்.

இன்றைய சந்திப்பில் நீதிமன்றத் தீர்ப்பின் முடிவுகள் எவ்வாறு அமைந்தாலும் அதற்கு ஏற்றால் போல நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் ஆராயப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மு)

## நான் இப்போது...

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமையதான் தற்போது வேலையற்ற பிரதமர் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட மகிந்த ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனை கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க கூடிய நிலையில், இருந்தும் அதனை தவிர்த்தது. இதனை் மக்கள் உணர்ந்துள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளாக மக்கள் பல்வேறு வரி விதிப்புகளால் பல கஷ்டங்களை அனுபவித்தனர்.

நான் பிரதமராக பதவியேற்றதும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினேன். அந்த வேலைத்திட்டத்தை சிலர் ஊடக கண்காட்சி என வர்ணிக்க முயற்சித்தனர்.

நாட்டில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றமே காணப்படுகிறது. அங்கு நடக்கும் கூட்டங்களில் கலந்துகொள்வது பலனளிக்காது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையில்லை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் விடுதலை முன்னணி வாக்களிக்குமா என்பதை பார்ப்போம். ரணில் பிரதமர் பதவியை மக்கள் காப்பாற்றி கொடுப்பார்களா என்பதை மக்களிடம் சென்று கண்டறிய முடியும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய பிரச்சினைக்கு மிகச்சுலபமாக தீர்வு கண்டிருக்கலாம் எனவும் இந்த பிரச்சினையில் நீதிமன்றம் தலையிட்டிருப்பதே சிக்கலாகியுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.(மு)

## விடுதலைப் புலிக...

பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்பு இல்லை என்று அண்மையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பெயரில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் அதில் கைச்சாத்திட்டிருந்த இரண்டு பேரும் விடுதலைப் புலிகளின் தலைவர்களால் உத்தியோகபூர்வமாக அந்த பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் இல்லை என்பதோடு. விடுதலைப் புலிகள் இயங்கிய காலப்பகுதியில் அவர்களது செயற்பாடுகள் குறித்த குறிப்புகளும் இல்லை என்றும் பேராசிரியர் ரொஹான் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் 2009 ஆம் ஆண்டு உள்நாட்டில் அழிக்கப்பட்டு விட்டாலும், சர்வதேச அளவில் அதன் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

இது இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்குமே ஆபத்தானதாகும்.

எனவே இந்த விடயத்தை இந்தியாவும், இலங்கையும் ஒன்றிணைந்து கையாள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(மு)

## தமிழ்த் தேசியக்...

மானமாகும். மக்கள் விடுதலை முன்னணி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது ஆதரவு இல்லாவிடின் எதிர்தரப்பினரை விட ஐக்கிய தேசிய கட்சிக்கு குறைவான பெரும்பான்மையே காணப்படும் என்று மகிந்த தரப்பினர் தவறான கணிப்புக்களை முன்னெடுக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்து ஜனநாயகத்தை பாதுகாக்கவே குரல் கொடுத்து வருகின்றனர். இவர்கள் தற்போதைய ஒரு சில விடயங்களை மாத்திரம் மையப்படுத்தி அரசியல் ரீதியான தீர்மானங்களை ஒருபோதும் எடுக்கமாட்டார்கள். தூர நோக்க சிந்தனையுடன் அரசியல் தீர்வுகளை முன்னெடுக்கவே முனைவார்கள். ஆகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகளை ஒருபோதும் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (மு)

## காணாமல் ஆக்க...

மாவட்ட செயலகம் முன்பாக நடத்தவுள்ளதாகவும் அனைத்து தரப்பையும் தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி தங்கள் பிள்ளைகளை தேடி கண்டறிய அணிதிரளுமாறு கோரியுள்ளனர். (மு-281)

## முல்லைத்தீவில்...

ளது. திமிங்கிலத்தில் இருந்து கொழுப்பு வடிந்தோடிக்கொண்டிருப்பதால் அருகில் சென்று பார்க்கமுடியாத நிலையில் காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (மு-281)

## ஜனநாயகத்தை...

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான மக்கள் தீர்ப்பாயம் எனப் குறிப்பிடப்பட்டு பொதுமக்களிடம் கையெழுத்துக்களும் பெறப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (மு)

### அங்கவீனமுற்ற முன்னாள் இராணுவ வீரர்

# இன ஐக்கியத்தை வலியுறுத்தி சக்கர நாற்காலிப் பயணம்

(குருமன்காடு)

நாட்டில் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் இரு கால்கள், வலது கை இரு விரல்களையும் இழந்த முன்னாள் இராணுவ வீரரொருவர் நாட்டின் இன ஐக்கியத்தினை வலியுறுத்தி தேவேந்திர முனையிலிருந்து கடந்த 03 ஆம் திகதி ஆரம்பமான சக்கரநாற்காலி பயணமானது நேற்று மாலை 3.30மணியளவில் வவுனியா நகரை வந்தடைந்தது.

தெய்வேந்திர முனையிலிருந்து கடந்த 03 ஆம் திகதி ஆரம்பமாகிய சக்கர நாற்காலி பயணமானது சுமார் 580கிலோமீற்றர் தூரம் கடந்து 11 அம் திகதி பேதுரு முனையினை சென்றடையவுள்ளது.



வவுனியாவினை வந்தடைந்த குறித்த பயணத்தினை தாண்டிக்குளம் பகுதியில் வவுனியா பிரதேச செயலக ஊழியர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என பலரும் இணைந்து வரவேற்றனர். (மு-250)

# தற்கால அரசியல் நெருக்கடிக்கு பொதுத் தேர்தலே ஒரே தீர்வு

### டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

தற்போதைய அரசியல் நெருக்கடி, ஒரு பொதுத் தேர்தல் நடத்தாமல் தீர்க்கப்படாது என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

வெலிகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தோடு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஜனாதிபதி தேர்தலால் கூட தீர்வை தர முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், நிறைவேற்று அதிகாரதிற்கும் சட்டநெறிமுறைகளுக்கும் இடையில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வாக ஒரு ஆணைக்குழுவை அமைத்து அதன் மூலம் உண்மையை கொண்டுவர முடியும் என தெரிவித்துள்ளார். (மு-3)

# அரசியல் குழப்பங்கள் அனைத்துக்கும் ஜனாதிபதியின் செயற்பாடே காரணம்!

### ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம், நேற்று ஞாயிற்றுக்கிழமை வடமேல் மாகாணசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், அண்மைக் காலமாக எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல.

நாட்டில் ஏற்பட்டுள்ள பல அரசியல் குழப்ப நிலைகளுக்கு ஜனாதிபதி எடுக்கும் பல முடிவுகளே காரணமாகியுள்ளன. அவரது நடவடிக்கைகள் தான்தோன்றித்தனமாகவும் நாட்டினது நலனைப் பெரிதும் பாதிக்கும் வகையிலும் காணப்படுகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதி அண்மையில் 19 ஆம் திருத்தம் தொடர்பாக தெரிவித்த கருத்து சர்ச்சைக்குரிய ஒன்றாகும். தற்போது அவர் 19 ஆம் திருத்தத்தினைத் திருத்தப்போவதாக அபாய அறிவிப்பினையும் விடுத்துள்ளார்.

இவ்வாறான குழப்பமானதும் சர்ச்சைக்குரியதுமான நடவடிக்கைகளை அவர் முன்னெடுப்பதன் மூலம் இதுவரை காலமும் இடம்பெற்ற தவறுகள் அனைத்திற்கும் ஜனாதிபதியே காரணம் என்பது தெளிவாகத் தெரிகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார்.(மு-3)

கொவிசெத
திகதி 2018.12.09
சீட்டிழுப்பு இலக்கம் 1968
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 01 03 18 74
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/12/09
சீட்டிழுப்பு இலக்கம் 3807
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 8 2 1 3 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2018-12-09
சீட்டிழுப்பு இலக்கம் 86
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 01 29 42 58
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/12/09
சீட்டிழுப்பு இலக்கம் 483
லக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 15 37 56 64 02
தேசிய லொத்தர் சபை

## இரணைமடுவில் நீராடியவர்...

சேர்ந்த 21 வயதுடைய என்.டிலக்சன் எனும் மாணவனே பலியாகியுள்ளார். நேற்று மாலை 4.30 மணியளவில் இரணைமடுவின் வான் கதவு நான்கு திறக்கப்பட்டிருந்து. இதில் இடது பக்கம் இரண்டு கதவுகளும், வலது பக்கம் இரண்டு கதவுகளும் திறக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பகுதிக்குள் பெருமளவான பொது மக்கள் குழுமியிருந்தனர். இதில்சில இளைஞர்கள் குறித்த பகுதியின் ஆழமான பகுதிக்குள் இறங்கி குளித்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியிலிருந்து ஐந்து பேருடன் இரணைமடுவை பார்க்க வந்திருந்த இளைஞர் ஒருவர் குளிப்பதற்கு இறங்கிய போது நீரில் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் அவருடன் வருகை தந்த நண்பர்கள் அழுதவாறு காணப்பட சம்பவ இடத்தில் நின்ற ஊடகவியலாளர் உடனடியாக கிளிநொச்சி பிரதி பொலிஸ் மா அதிபர், கிளிநொச்சி படைகளின் தலைமையகம். போனோருக்கு உடனடியாக அறிவித்த போதும் முப்பது நிமிடங்களுக்கு பின்னரே பொலிஸ் மற்றும் படையினர் வருகை தந்தனர்.

இதற்கிடையில் ஒரு பகுதியில் திறக்கப்பட்டிருந்த வான் கதவுகள் மூடப்பட்டு சில இளைஞர்கள் நீரில் இறங்கி தேடுதலை மேற்கொண்டு ஒரு மணித்தியாலயத்திற்கு பின்னர் உடலை மீட்டனர்.

இரணைமடுகுளம் அபிவிருத்திக்கு பின் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-312)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-4571)

TECHNO WORLD
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L - 2021
விரைவில் ஆரம்பம்
077 017 5346
(C-4658)

## இரணை...

மயிரிழையில் தப்பியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை ஐந்து மணியளவில் இடம் பெற்றது. இரணைமடுகுளத்தை பார்வையிடுவதற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர். அவர்களுடன் சிறுவர்களும் வருகை தந்திருந்தனர்

இதன்போது சிலர் தங்களது பிள்ளைகளுடன் ஆபத்தான பகுதியான வான் பாயும் பகுதிக்குள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். இந்நிலையில் குறித்த பகுதியில் இளைஞர் ஒருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்ட சம்பவத்தில் பரபரப்பாக இருந்த போது மறுபுறம் சிறுமி ஒருத்தி நீருக்குள் வீழ்ந்து தத்தளித்த போது ஒருவரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் அங்கிருந்தவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியதோடு, இரணைமடு குளத்தை பார்வையிடுவதற்கு வருகை தருபவர்கள்தங்களது குழந்தைகளை மிகவும் கவனமாக வைத்திருக்க வேண்டும் எனவும், ஆபத்தான பகுதிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்குள் குழந்தைகளுடன் செல்ல வேண்டாம் என்றும், அத்தோடு சிறுவர்களை தனியே இரணைமடுவுக்கு அனுப்ப வேண்டாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (மு-312)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7846)


CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை
- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-4648)

தனு பிறிண்டேர்ஸ்
தருமபுரம், கிளிநொச்சி
Banner Print பனர் பிறிண்ட் 35/=
Cup Print மக் பிறிண்ட் 350/=
A2 ஓவ்செற் பிறிண்ட் 350/=
போட்டோக்கொப்பி 3/= (இருபக்கம்)
> பாடசாலை சஞ்சிகைகள்
> நினைவு மலர்கள்
> கண்ணீர் அஞ்சலிகள்
போன்ற அனைத்து விதமான அச்சுப்பதிப்பு வேலைகளையும் சிறந்த முறையில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
(7847)
தொ.பே : 0776115301, 0773442420

# மரண அறிவித்தல்

## கந்தையா தர்மராசா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கலப்பனாலோடை அளவெட்டி வடக்கு அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மராசா நேற்று 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா-மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும், நாகராசா, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் செல்வராசா, தங்கராசா, லலிதாதேவி, பத்மநாதன், பானுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான, தாயுமானவர், சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சாமினியின் (ஆசிரியை யா/சின்னங்கலட்டி ஞானோதயா வித்தியாலயம்) பாசமிகு தந்தையும், பிரதீபனின் (சிரேஷ்ட தொழில் அலுவலர் தொழில் திணைக்களம் கிளிநொச்சி) அன்பு மாமனாரும், ஆதிரை, ஆருத்திரா, அரங்கன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2018) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சக்தி அகம்"
அளவெட்டி வடக்கு, அளவெட்டி (7848)

தகவல் : குடும்பத்தினர்

BA,Bcom,BBA
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை) வெளிவாரி
- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/Lஇல் முழுமை சித்தி அடைந்தவர்களும் இரண்டு (2) பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆகும்.
- BAல் தமிழ், ஆங்கிலம், பொருளியல், பொதுநிர்வாகம் (Public Administration) அரச அறிவியல், சமூக விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்து இப்பட்ட நெறியினை மேற்கொள்ள முடியும்.
- இப்பட்ட நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 15.12.2018 (காலை 8.00 மணி)
- இப்பட்ட நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
- இப்பட்ட நெறிகள்யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- பரீட்சைகள் யாவும் மேற்படி பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் நடைபெறும்.
- MA, MCom, Msc இவற்றுக்கான பதிவுகளும் நடைபெறுகின்றன.

யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்
021 222 8148, 077 314 4762
077 846 9721
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C-4655)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-4649)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.